திராவிடநாடு

21—2—60 | வார வெளியீடு | விலை 16 காசு

# அடிமை அகற்றிடு

[ முல்லைக் கோமான் ]

முத்துக் குளிக்கக் கடலுண்டு
முத்துநெல் விளக்கப் பொன்னரியுண்டு
நித்தம் இசைக்கத் தமிழுண்டு
நீந்திக் களிக்கப் புனலுண்டு
கொத்தாய் மலையில் ஏலமுண்டு
கூடிக் குலவும் வேழமுண்டு
இத்துணை வளமும் கொண்டதுண்டு
எங்கள் திராவிடப் பூமியென்றும்!

வாழ்வு காட்டிடக் குறளுண்டு
வீரம் ஊட்டிடப் புறமுண்டு
தாழ்வு நீக்கிடக் கரமுண்டு
தரித்து வாழ்ந்திட உரமுண்டு
தாழ்ந்த தென்னன் நீதிகண்டு
சீறிக் களித்த சிலம்புண்டு
சூழ்ந்த இலக்கியச் சோலையுண்டு
சுரக்கும் இன்பச் சுனையுண்டு

ஆண்டு காத்திட அறிவாளருண்டு
அருங்கலை வளர்த்திடக் கலைஞருண்டு
வேண்டும் துணைக்குப் பலருண்டு
வேலைத் தாங்கும் படையுண்டு
கூண்டுக் கிளியாய் குற்றுயிராய்
கூடி வாழின் கோழையன்றோ!
ஆண்டு மகிழ வேண்டுமன்றோ
அடிமைத் தளையை அகற்றின்றே!

# அவன் திருந்தினான்!

—[இரா. வைத்தியலிங்கம்]—

உலகில் எத்தனையோ அதிசயங்கள் நடைபெறுகின்றன. எத்தனையோ காட்சிகள் காணக்கிடக்கின்றன. அவனும் கடந்த இருபது ஆண்டுகளில் எத்தனையோ காட்சிகளை கண்டிருக்கிறான்.

ஆண் சிட்டும், பெண் சிட்டும் வாழும் கூட்டு வாழ்வைப் பார்த்திருக்கிறான். ஆண் மகனும், பெண் மகளும் இணைந்து வாழும் காதல் வாழ்வைக்கண்டிருக்கிறான்; வண்டியிழுக்கும் பாட்டாளியைப் பார்த்திருக்கிறான்; காரில் செல்லும் சீமான்களைக் கண்டிருக்கிறான்; மனதைக் கிளரச் செய்யும் மங்கையரைக் கண்டிருக்கிறான்; உள்ளத்தைக் கிள்ளும் இசையைக் கேட்டிருக்கிறான்.

இந்தக் காட்சிகள் அவன் வாழ்வை மாற்றத் தூண்டவில்லை! அவர்களைப்போல் வாழவேண்டும் என்று அவன் எண்ணியதில்லை!

ஒப்பனைக் கலைஞரிடம் அவனைக் கொண்டுபோய் நிறுத்தி—அவனுக்கு ஒப்பனை செய்துபார்த்தால் "சினிமா நட்சத்திரமா, சீமான் வீட்டுச் செல்வனா" என்று கேட்க நேரிடும்! அத்தனை உடல் வளமும், அங்க அமைப்பும் பெற்றிருந்தான்! ஆனால், அந்த உடலில் வறுமை, அறியாமை, அனாதை, ஏற்றத் தாழ்வு—என்ற கறைகள் படிந்திருந்தன!

நடமாடும் மிருகமாகத்தான் திரிந்தான். அவன் கூடச்செல்லும் நாய்க்கும், அவனுக்கும் அதிக வித்தியாசம் கிடையாது. அந்த நாயும் உண்டுதான் வாழ்கிறது. அவனும் சாப்பிட்டுத்தான் உயிர் வாழ்கிறான். அவனும் நடக்கிறான். அதுவும் நடக்கிறது. அவனும் தூங்குகிறான். அதுவும் தூங்குகிறது.

ஆனால்—

அவனுக்குப் பேசத்தெரியும், சிரிக்கத் தெரியும். தெரிந்தும் அவன் சிரித்திலன்! அதிகம் பேசிலன்!

ஒருநாள் ஆற்றங்கரைச் சத்திரத்தை நோக்கி அவன் நடை சென்றுகொண்டிருந்தது. ஆற்றங்கரைச் சத்திரத்தில்தான் அவன் வழக்கமாகச் சாப்பிடுவான். இன்றும் கையில் சோற்று உருண்டையுடன் சாப்பிடத்தான் சத்திரம் நோக்கி நடந்தான். அவனோடு அவன் சொறி நாயும் பின்தொடர்ந்தது. இது வழக்கமான பழக்கம் தான்.

சோற்று மூட்டையைப் பிரித்தான் உண்பதற்கு. பக்கத்தில், ஆற்றில் குளித்துக்கொண்டிருந்தவரின் அபயக்குரல் எழுந்தது! ஐயா...! அம்மா! காப்பாற்று...! காப்பாற்று...! என்று ஒரு பெண்ணின் ஈனக்குரல் இரிச்சிட்டது!

அடுத்த நிமிடம் சொறி நாய் குரல் கேட்ட திசையில் ஓடியது! பிரித்த சோற்று மூட்டையை அப்படியே வைத்துவிட்டு நாயைப்பின் தொடர்ந்தான் அவன். நாய் கரையில் நின்றுகொண்டு ஆற்றில் மிதந்து செல்லும் ஒரு பெண்ணுருவைப் பார்த்துக் குரைத்துக் கொண்டிருந்தது!

வந்தவன் அடுத்த சில வினாடிகளுக்கெல்லாம் சுழலும் ஆற்று வெள்ளத்தில் குதித்தான்! மிதந்து சென்ற பெண் உருவை நோக்கி நீந்தினான்! அவனோடு அவன் சொறி நாயும் ஆற்றில் குதித்து அவனைப் பின்தொடர்ந்தது.

இப்பொழுது அவன் கரை சேர்ந்தான். வெறுங்கையோடு அல்ல! பருவம் கொழிக்கும் பாவையோடு! அவனது கரங்கள் இரண்டும் அவளைத் தாங்கி இருந்தன! பின் மடியில் போட்டுக்கொண்டு அவளையே பார்த்துக்கொண்டிருந்தான். அவளோ மூர்ச்சையுற்றிருந்தாள்!

அவன் மூளை வேலை செய்ய ஆரம்பித்தது! எழுந்து நின்று அவளைக் கையிலே ஏந்திக் கரகர வென்று சுற்றிவிட்டு மீண்டும் தன் மடியிலே போட்டுக்கொண்டான். அவளை விழுங்கிவிடுவது போல் பார்த்தான். முகத்தை மறைத்துக் கொண்டிருந்த அவளது கருங் குழலைச் சற்றே ஒதுக்கிவிட்டுப் பார்த்தான். அவளது உப்பிய கன்னத்தை இலேசாகத் தட்டிப் பார்த்தான்! இயற்கை தந்த அவன் உணர்வுகள் வெடித்தன! அவனது பிடி அவளை இறுக்கியது!

அடுத்து அவள் விழி திறந்தாள்! அவனைப் பார்த்தாள்! உற்று உற்று பார்த்தாள்! அவள் விழிகள் அவனைப் பார்த்தன. நன்றியுடன் கண்ணீர் சிந்தின! அவள் கரங்கள் அவன் கழுத்தை இறுக்கி இருந்தது!

அவன் அவள் அணைப்பில் தன்னையே மறந்தான்! அவனுடைய நாடிநரம்புகள் புத்துயிர் பெற்றன! ஏதோ இனம் தெரியாத இன்ப வெள்ளத்தில் மூழ்கினான்! அவன் கரங்கள் மேலும் அவளை இறுக்கின.

அவள் தன் நிலை உணர்ந்தாள். பெண்மை உணர்வு அவளைத் தட்டி எழுப்பியது! அவன் பிடியிலிருந்து துள்ளி எழுந்தாள் அத்துடி யிடை! அவனை எடைபோட்டது அவள் விழிகள்! அவள் உடலை வெறித்துப் பார்த்து நின்றான் அவன்! அவன் பார்வையிலே பண்பு இல்லை! அவன் கருத்திலே களங்கம் கண்டாள்! அவனுக்கு நன்றி தெரிவிக்கவும் அவள் மனம் கூசியது! ஏளனப் பார்வை ஒன்றை அவன்மீது வீசிவிட்டு, அங்கிருந்து நகர்ந்தாள்—அந்தக் குடும்ப விளக்கு!

அவள் சென்ற திக்கை நோக்கினான் அவன்! அவன் உள்ளத்திலே புயல் வீசியது! அவனுக்கு பசி எடுக்கும்பொழுது இம்மாதிரி புயல் வீசும்! ஏதாவது வயிற்றில் போட்டால் அடங்கிவிடும் அந்த புயல்! இப்பொழுது அவனுக்கு பசிக்கவில்லை! ஆனாலும் அவன் உள்ளத்திலே வீசுகிறது புயல்!

நீல வானத்தைக் கண்டான், வாழ்வு கண்டான்! பசுமைச்சோலையைக் கண்டான்! ஆடும் கலாபம் கண்டான். கருமேகக் கூட்டம் கண்டான்! பொழியும் மழையெனக் கண்டான்!

அவன் கண்களில் ஒளிவீசியது! உள்ளம் தெளிவுபெற்றது! புத்தம் புதிய மனிதனாய்—நம்பிக்கை உள்ளத்தினனாய்—அந்த ஆற்றங்கரையில் பீடுநடை போட்டுக்கொண்டிருந்தான். திருந்திய மனிதனாகத் திகழ்ந்தான் அவன்.

# பிரான்சு போட்ட குண்டு!

ர் 18 ஆண்டுச் சந்தா ரூ. 8. (21-2-60) தனிப் பிரதி 16-காசு இதழ் 32

அணு ஆயுதங்களைத் தடை செய்தாகவேண்டுமென்பதில் உலக நாடுகள் அனைத்தும் ஒரே முகமாக நின்று, அதற்கான வழிவகைகளை, காணுவதில் பெருமுயற்சி எடுத்து வரும் இந்நாளில், இதற்கு 'நான் மட்டும் விதிவிலக்கு' என்ற முறையில் பிரஞ்சு நாடு அணுகுண்டுப் பரீட்சை செய்திருப்பது வேண்டாத—விரும்பாத—வேதனையூட்டும் நிகழ்ச்சியாகும்.

அண்மையில் இங்கு வந்து திரும்பிய இரஷ்யப் பிரதமர் குருச்சேவ் அணு ஆயுதத் தடையின் அவசியத்தைப் பெரிதும் வற்புறுத்திப் பேசியதோடு நில்லாமல் பண்டித நேருவும் தானும் சேர்ந்து வெளியிட்டுள்ள கூட்டறிக்கையில்,

"அணு ஆயுதங்களைத் தடைசெய்யும் முறையில் வல்லரசுகள் நடவடிக்கை எடுக்கவேண்டும்"

என்று குறிப்பிட்டிருப்பதை நாம் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

இரஷ்யப் பிரதமரும் பண்டித நேருவும் சேர்ந்து அணு ஆயுதத் தடை பற்றிய கூட்டறிக்கை தயாரித்துக் கொண்டிருக்கும் சமயத்தில்தான் பிரஞ்சுசர்க்கார் அணுகுண்டுப் பரிட்சையை நடத்தியிருக்கிறது.

இந்த திங்கள் 13-ந் தேதி 11-30 மணியளவில், இதுவரையில் உலகில் இருந்துவரும் குழப்பங்கள் போதாதென்று, பிரான்சு ஒரு வேண்டாத புதிய குழப்பத்தையும் தோற்றுவித்திருக்கிறது. இதுவரையில், அணுவை அழிவு வேலைகளுக்கும் பெரும் அளவில் உபயோகப்படுத்தத் தெரிந்த நாடுகளான இரஷ்யா, அமெரிக்கா, பிரிட்டன் ஆகிய நாடுகளோடு பிரான்சும் தற்போது நான்காவது நாடாக சேர்ந்துகொண்டது, வேண்டாத விருந்துக்கு வரும் அழையாத விருந்தினரைப் போல.

சில நாட்களுக்கு முன்புதான் டிகாலின் தலையின்மீது விழுந்தது அல்ஜீரியப் பிரச்சினை என்ற ஒரு பெரும் குண்டு. ஆனால் இப்போது அதே டிகாலேயின் விஞ்ஞானிகள் போட்டிருக்கிறார்கள் ஒரு அணுகுண்டை சகாரா பாலைவனத்தில். இத்திங்கள் 13-ந் தேதி நடந்திருக்கும் அணுகுண்டுச் சோதனை வேண்டாதது, நன்மை பயக்காதது என்பதைச் சென்ற ஆண்டு நவம்பரில் ஐக்கிய நாடுகள் சபையில் மொராக்கோ என்ற பிரான்சின் அண்டை நாடு ஒரு தீர்மானமாகக்கொண்டுவந்து நிறைவேற்றிவைத்தது. ஆனால், ஐ. நா. சபையில் நிறைவேறிய தீர்மானத்தையும் ஒதுக்கிவிட்டு, உலகின் பல நாடுகளின் வேண்டா வெறுப்பையும் சம்பாதித்துக்கொண்டு பிரான்சு அணு சோதனையை நடத்தியிருக்கிறது.

அணு சோதனையை நடத்தியதே ஒரு மாபெரும் குற்றம்; மேலும் அந்த அணு சோதனையை நடத்திய இடமே—பிரான்சினுடையது அல்ல என்ற ஒரு புதுக் குற்றமும் தோன்றியிருக்கிறது! அணு சோதனைக்கான இயந்திரங்களை வைத்து இயக்கிய இடம் ஒரு "வரையறுக்கப்படாத எல்லைக் குழப்பமுள்ள" இடம் என்று அந்த இடத்தின்மீது தானும் சொந்தம் தெரிவித்து எச்சரித்திருக்கிறது மொராக்கோ.

நிகழ்ந்திருக்கும் அணு சோதனையைத் தடுத்து நிறுத்துவதற்காக கடைசி நிமிடம் வரையில் முயன்றிருக்கிறது "மைக்கேல் ஸ்காட்" என்ற ஆங்கிலப் பாதிரியாரின் தலைமையின் கீழ் சென்ற அகில உலக எதிர்ப்புக் குழு. ஆனால் சோதனை நடந்த "ரெக்கான்" என்ற இடத்தில் இவர்கள் அத்தனைபேரும் தடுத்து நிறுத்தப்பட்டிருக்கிறார்கள்.

அணுகுண்டு வெடித்துச் சோதனைபார்க்கப்பட்ட அன்றிலிருந்து உலகெங்கணுமிருந்து, எதிர்ப்புக் கணைகள் பிரான்சை நோக்கிப் பாய்ந்த வண்ணமுள்ளன.

"இதுவரையில் பிரஞ்சுக்காரர்கள் அல்ஜீரியர்களைத்தான் கொடுமைப்படுத்திக் கொன்று வந்தார்கள். ஆனால் ஆப்பிரிக்க நாட்டினர் அனைவரையுமே கொடுமைப்படுத்தித் துன்பத்துக்குள்ளாக்கியிருக்கிறார்கள் என்பது இப்போதுதான் தெரிகிறது" என்று வருத்தம் தெரிவித்திருக்கிறது கெய்ரோ.

"மனித இனத்துக்கு இழைத்திருக்கும் மாபெரும் துன்பம்......ஐ.நாவின் தீர்மானத்தை மதிக்காத இழிதன்மை" என்று சுடுசொற்கள் வீசியிருக்கிறது ஆப்பிரிக்க நாடுகள்.

"இச்சோதனை பிரான்சின் அரசியல் அந்தஸ்தை ஆசியா—ஆப்பிரிக்கா நாடுகளிடையே வெகுவாகக் குறைத்துவிடும்.........பிரான்சின் இச்செய்கை டிகாலின் பிடிவாதத்தைத்தான் காட்டுகிறதே தவிர, அரசியல் விவேகத்தைக் காட்டவில்லை" என்று ஐ. நா. சபையின் அரசியல் வட்டாரங்கள் வருத்தம் தெரிவித்திருக்கின்றன.

"இதுபோன்ற அணுச் சோதனைகள் இனி நிகழக் கூடாது, என்ற ஒரு எண்ணம் வலுப்பெற்று வரும்போது திடீரென்று பிரான்சு அந்த வரப்போகும் சூழ்நிலையைக் கலைத்திருக்கிறது" என்று விமர்சித்திருக்கிறது இரஷ்யா.

"பிரான்சின் அணுசோதனையை எனது நாடு மிகுந்த துன்பத்தோடு தெரிந்துகொள்ளுகிறது" என்று தனது அறிக்கையில் குறிப்பிடுகிறார் கானாவின் பிரதமர் நுக்ருமா.

"அணுசோதனைகளை நிறுத்தவேண்டும் என்ற ஒரு எழுதாத தீர்மானத்தில் புதுவித குழப்பத்தைத் தோற்றுவித்திருக்கிறது பிரான்சு" என்று சொல்லியிருக்கிறார் இரஷ்யாவின் முதல் துணைப் பிரதமர் மிக்கோயன்.

"இதற்கு முன்னரே தாழ்ந்திருக்கும் பிரான்சின் அந்தஸ்து இதற்குப்பின்னர் இன்னும் தாழ்ந்து போகத்தான் செய்யும்...சரித்திரம் இவர்களை மன்னிக்காது" என்று ஆசியா—ஆப்பிரிக்கா மாநாட்டின் இந்திய காரியதரிசி எச். டி. மாளவியா குறிப்பிட்டிருக்கிறார்.

"ஆசியா—ஆப்பிரிக்கா கூட்டணியில் சம்பந்தப்பட்ட 52-நாடுகளும் பிரான்சோடு கொண்டிருந்த அரசியல் உறவுகளை இனித் துண்டித்துக்கொள்க" என்று 52-நாடுகளடங்கிய ஆசியா — ஆப்பிரிக்கா இயக்கத்துக்கு செய்தி அனுப்பியுள்ளார் யூசல்சிபெய் என்ற எகிப்தின ஆசியா — ஆப்பிரிக்கா மாநாட்டுக் காரியதரிசி.

கனா, மொராக்கோ முதலிய ஆப்பிரிக்க நாடுகளும் எகிப்து முதலிய ஐக்கிய அரபுக் குடியரசு நாடுகளும் நிகழ்ந்திருக்கும் அணுசோதனை மக்களை எந்த அளவில் பாதிக்குமோ என அஞ்சுகின்றன. சோதனை நிகழ்ந்த அன்றிலிருந்து காற்றில் புதுவித சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது என்று சைப்ரஸ் ரேடியோ கூறுகிறது.

எப்படியோ பிரான்சின் எண்ணம் கடந்த 13-ந் தேதி 11-30 மணியளவில் நிறைவேறிவிட்டது. தானும் அணுகுண்டு உற்பத்திசெய்யும் வல்லரசுகளோடு சேரவேண்டும் என்ற வேண்டாத எண்ணத்தை நிறைவேற்றிக்கொண்டுவிட்டது பிரான்சு. சகாராபாலைவனத்தில் தனது முதல் அணுகுண்டைப் போட்ட அன்றே பிரான்சு உலக மக்கள் எல்லோரது உள்ளத்திலும் மற்றொருவகையான குண்டையும் போட்டுவிட்டது. அதுதான்: "இப்போது நிகழ்த்தியிருக்கும் சோதனை இனி தொடர்ச்சியாக வருபவைகளின் ஆரம்பம்" என்ற அதிர்ச்சி பொருந்திய அறிவிப்பு.

அணுகுண்டு உற்பத்தியில், இரஷ்யா, அமெரிக்கா பிரிட்டன் போன்ற மூன்று வேண்டாத பிள்ளைகளைத் தான் உலகப்பன் பெற்றிருக்கிறான் என்று இதுவரை மக்கள் எண்ணி வந்தனர். ஆனால் அந்த வரிசையில் 'நானும் சேருகிறேன்' என்று வருகிறது, சில நாட்களுக்கு முன், மனித இனம் உயிர்வாழ உதவும் காற்றை மாசுபடுத்திய பிரான்சு. அல்ஜீரியப் பிரச்சினையை இன்னும் சரிவரத் தீர்க்கமுடியாத பிரான்சு 'அணுகுண்டு சோதனையில் நான்' என்று மார்தட்ட விழைகிறது.

"வால்டேரும் ரூசோவும் வாழ்ந்த பிரான்சே! அணுவை அழிவு வேலைகளுக்கு ஈடுபடுத்துவதில் நீயும் 'திறமைசாலி' தான்! அந்த உனது 'திறமை'யைக் காண்பிக்க ஒரு சோதனை நிகழ்த்திவிட்டாய். 'மெச்சுகிறேன்!' அழிவு வேலைகளில் உனது திறமை மற்ற மூன்று நாடுகள் முன்பு கொண்டிருந்ததுபோல் சமமாக உள்ளது. உனது அந்த ஆசையை ஒரு தடவையில் நிறைவேற்றிக்கொண்டாய். போதும்! இனி வேண்டாம்! அணுத் துறையில் நீ கொண்டிருக்கும் அறிவை ஆக்கவேலைகளுக்குப் பயன்படுத்து! மனித இனத்துக்காகவாவது மனிதத் தன்மையோடு நடந்துகொள்!"

நியாயத்திற்கும் நீதிக்கும் கட்டுப்படாத துடுக்குப் 'பிள்ளை'களைப் பெற்றுவிட்ட 'உலகப்பன்' வேறு எதைச்சொல்லி எந்த வகையில் மன்றாட முடியும்?

பிரஞ்சுச் சர்க்கார் நடாத்திய இந்த விபரீதப் பரீட்சையால் ஏற்பட இருக்கும் விளைவுகள் பற்றிப் பலர் கண்டனக்குரல் எழுப்பியுள்ளனர் என்பதை நாம் மேலே எடுத்துக்காட்டியுள்ளோம்.

யு. எஸ். வானிலை ஆராய்ச்சி நிலையத்தைச் சேர்ந்த வான சாஸ்திர நிபுணரான இராபர்ட் ஜேவிட் என்பவர் 16—2—60ல் வெளியிட்டுள்ள தகவல் எல்லோருக்கும் திகிலை உண்டாக்குவதாக உள்ளது

> "பிரான்சின் முதல் அணுகுண்டுப் பரீட்சையால் ஏற்பட்ட அணுக்கதிர் இயக்கத்தால் விஷமாக மாறிய மேகம் கிழக்குத் திசைப் பக்கமாகத் துருக்கி, எகிப்து, சவூதி அரேபியா, இந்தியா, ஆகிய நாடுகளை நோக்கி நகரத் தொடங்கியிருக்கிறது."

என்று கூறியுள்ளார். எனவே இந்த விஷமேகம் என்னென்ன விபரீதங்களை விளைவிக்குமோ என்ற அச்சம், அது பரவிவரும் நாடுகளில் உள்ளவர்களுக்கு இயற்கையாகவே உண்டாகும்.

முன்பு அமெரிக்கா, ஹிரோஷிமா, நாகசாக்கி என்ற ஊர்களில் செய்த விபரீத விளையாட்டால் ஜப்பானும் அதன் பகுதிகளும் எத்துணை அல்லல்களுக்கு ஆளாயின—இன்னும் ஆளாகிக்கொண்டுள்ளன என்பதை எண்ணும் எவருக்கும், பிரான்சின் பித்துக்கொள்ளித்தனமான பரீட்சையால் ஏற்பட இருக்கும் விபரீதங்கள் பீதியை உண்டாக்காமல் இருக்க முடியாது.

எனவே, விஞ்ஞான அறிவின் முதிர்ச்சி வேதனையை உண்டாக்காது பார்த்துக்கொள்ள வேண்டியது உலகிலுள்ள ஒவ்வொருவருடையவும் நீங்காக் கடமையாகும்.

இவ்வுபகண்டத்துப் பிரதமரும் இலங்கைப் பிரதமரும் சேர்ந்து வெளியிட்ட அறிக்கையில் கண்டுள்ளபடி, உலகிலுள்ள வல்லரசுகள் எல்லாம் ஒன்றுகூடி, இனிமேலாவது, எவரும் இந்த வேதனையை விளைவிக்கும் அணுகுண்டுச் சோதனையில் இறங்காதிருக்கும் வகையில் தக்க நடவடிக்கை எடுக்கும் என்று எதிர்பார்க்கிறோம்.

# எழுத்தறிவித்தவன்....?

— பழநி —

**வெண்ணெய்வேலன்**

"எழுத்தறிவித்தவன் இறைவனாகும்"—இது பழமொழி—வாய்க்கு வளப்பமான மொழி — சொல்வதற்குச் சுலபமான மொழி—சொற்றொகுதி. வாழ்க்கையில் துன்பந் தெரியாது — எதிரிகளின் எளிய நிலையை உணராது உயர்ந்துவிட்டவர்கள் வாழ்வு எங்கே? வளம் எங்கே என்று தேடுகின்ற ஆசிரியர்களைப் பார்த்து அலட்சியப்படுத்தும் வகையிலே — இழிவுபடுத்துகின்ற நிலையிலே —கண்துடைப்பு முறையிலே சொல்லுகின்ற ஏமாற்று வார்த்தைதான் மேலே கூறிய முதுமொழியென்பதை ஆசிரிய சமுகம் இன்று அறிந்து கொள்ளாமலில்லை. அன்று கூறினார்கள் இப்பழமொழியை ஆன்றோர்கள். அதன்படி ஆசிரியர்களின் நிலை அன்று அமைந்தது. ஆனால் இன்றோ பழமொழிக்குப் புறம்பான நிலையிலல்லவோ எழுத்தறிவித்த இறைவர்கள் தத்தளிக்கிறார்கள் – நடத்தப்படுகின்றார்கள்.

இன்று நாட்டிலேயும், ஏட்டிலேயும் வழங்கிவருகின்ற இத்தூய சொற் கூட்டத்தின் பெருமையை இன்றுள்ள மக்களும், ஆட்சியாளர்களும் உணர்ந்தார்களாவென்றால், இதைப்பற்றிச் சிறிது ஐயப்படத்தான் வேண்டியிருக்கிறது. மனத்துக் கண் மாசிலாத — என்றும் சமுதாயப் பணியிலேயும், முன்னேற்றத்திலேயும் அக்கறை கொண்ட ஒரு வகுப்பு வாழ வழியின்றி—வளமான வாழ்வின்றி—ஊருக்கிளைத்த ஊழியப் பெருங் கூட்டமாக வாழ்கிறதென்றால் அந்தக் கூட்டம் — அப்படிப்பட்ட ஒரு இனம் ஆசிரியர் கூட்டமாக—இனமாகத்தான் இருக்கவேண்டும்.

மாணவர்களின் மனமாசகற்றும் மதிப்பிற்குரிய ஆசிரியர்கள் இன்று படும் அவலநிலையையும் துன்பத்தின் போக்கையும் ஓர்ந்து பார்க்குங்கால் ஆசிரியர்களுக்கு நேரும் இத்தகைய அவக்கேடெல்லாம் அவர்கள்பழிபாதகங்களுக்கு அஞ்சிவாழ்கின்ற காரணத்ினால்தான என்பது தெற்றென விளங்கும். பல கோடிக்கணக்கான உள்ளத்தைச் சீர்படுத்தி நேர்படுத்தும் ஆசிரியர்களுடைய உள்ளம் இத்தகைய தூய்மையில் இருக்கிறதென்றால் அவர்களுக்கிருக்கும் நன்னெறிகளைத்தான் காட்டுகின்றது.

இன்று குழந்தைகள், நாளைப் பள்ளிப் பிள்ளைகள், இன்னும் நாட்கள் உருண்டோட, உருண்டோட வெவ்வேறு துறையில் உயர்ந்து கொண்டே போகும் மனித இனத்தை உயர்த்திடும் ஏணியாக —அறிவென்னும் பெருவிளக்கை உண்டாக்குந் தூண்டுகோலாக—அறியாமைக் கடலைக் கடந்து அறிவென்ற கரையையடைய உதவும் படகாக ஆசிரியர்களிருக்கிறார்களென்றால், இதைச்சொல்லித்தானா தெரியவேண்டும்? இப்படியெல்லாம் பிறரை உயர்த்திவிட்டுத் தன்னைத்தான் இருந்த நிலையிலேயே ஆக்கிக்கொண்டு 'உலகின் புறக் கண்டு தாமின்புறுவர்' என்ற வாக்குப்படி வாழும், அறிவுப்பசி போக்கும் மருத்துவனின் வாழ்க்கை முறையைப் பார்க்கும்போது, ஐயகோ எழுத்தறிவித்தவனின் நிலை இப்படியும் ஆகவேண்டுமா என்று நினைந்து நினைந்து நெக்குருகி அழவேண்டிய நிலை ஏற்படுகிறது!

நாளெல்லாம் இளஞ் சிறார்களின் மழலைமொழிகேட்டு உள்ளம் பூரித்து, அவர்களுக்கு அறமருள் அன்பு நெறியையும், உலக அறிவையும் ஊட்டுகின்ற ஆசிரியர், பள்ளி விட்டதும் தன்னில்லத்திற்கு வந்து நிலையைக் காணும்போது, மனைவி கூறுகின்ற துயர் புராணம் ஒருபுறம், தன்னில்லத்திலே இளவல்கள் நடமாடும்காட்சி மற்றொரு புறம். இதைக் காணும் ஆசிரியரின் உள்ளம் எந்நிலையில் இருக்குமென்பதை ஏழ்மை நிலையில் தத்தளிக்கும் ஒவ்வொரு உள்ளங்களும் புரிந்துகொள்ளும். ஆனால், தான் வாழவேண்டும், பிறரைப்பற்றி நமக்கென்ன கவலை என்று சொல்லி ஊரை ஏமாற்றித் திரியும் உலுத்தர்கள் — உல்லாச வாழ்வு காணும் உன்மத்தர்கள்—சுகபோகிகள்—நாடு மொழி காக்க நாட்டங்கொள்ளாத நச்சுமரங்கள் போன்றோருக்கு ஏழை ஆசிரியரின் நிலை எங்கே தெரியப்போகிறது? "பாம்பின்கால் பாம்பறியும்" "புளியேப்பக்காரனுக்கு எப்படித் தெரியும் பசியேப்பக்காரனின் நிலை?" என்ற பழமொழிகளுக்கேற்றவாறு ஏழையின் நிலைமைபற்றி ஏழைதான் உணரமுடியும் — அவர்கள்தான் கருணை காட்டமுடியும் — உதவிசெய்ய முடியும்!

இன்று எங்கேயோ சிலபல ஆசிரியர்கள் ஏதோ தம் வாழ்க்கையை அப்படியுமிப்படியும் அமைத்துக் கொண்டு மேற்போக்கான வளத்தோடு வாழ்கின்றார்களென்றால், அது ஏழை எளியவர்கள் தரும் ஆக்கத்தால், அல்லது ஆசிரியரின் உண்மைத் தத்துவத்தை—அவர்களின் அருமை பெருமைகளை உணர்ந்தவர்கள் **கொடுக்கின்ற**

ஊக்கத்தால் என்பதைக் கூறுமல் இருக்கமுடியவில்லை.

ஒரு ஆசிரியர் தான் பெறப் போகும் அற்பக் கூலிக்காக—அரசினர் தரும் சிறிய ஊதியத்திற்காக கிராமங்களிலே சென்று படும்பாடு இருக்கிறதே. அது சொல்லுந்தரமன்று. அக் கிராமத்துப்பிள்ளைகள் பள்ளிக்குவரவேண்டும், படிக்க வேண்டுமென்று தினந் தினம் வீட்டுக்கு விடு சென்று ஏறி இறங்குங் காட்சி மிகமிகக் கேவலமான நிலையிலிருக்கிறது. பிள்ளையைப் பெற்றவனுக்குக்கூட இருக்காது தன் பிள்ளை படிக்கவேண்டுமே என்ற அக்கறை. ஆனல் அந்த அக்கறையும் பெருநோக்கும் ஏழை ஆசிரியருக்கு இருக்கிறது.

ஒரு ஆசிரியருக்கு இத்தனை பிள்ளைகளிருக்க வேண்டுமென்ற ஒரு நியதியை ஏற்படுத்திவிட்ட காரணத்தாலும், அப்பிள்ளைகளின் கணக்குக் குறைவுபட்டால் அவருக்கு அளக்கும்படி நிறுத்தப்படும் என்ற மற்றொரு காரணத்தாலும் ஆசிரியருக்கு இத்தகைய ஒரு அக்கறை ஏற்பட்டாலும், நம் நாட்டுப் பிள்ளைகள் நன்ருகப் படித்துணர்ந்து நம்நாட்டுப் பண்டைப் பெருமையை உணரவேண்டும், என்றவொரு காரணத்திற்காக வேனும் இந்தப் பெரிய அக்கறை அவர்களிடத்திலே எழுந்திருக்கிறது என்று துணிவாகக் கூற முடியும்.

மக்கள் மத்தியிலேகூடச் சிலர் சொல்வார்கள் கதையாக "அந்தக் காலத்திலே நாங்கள் படித்தோமே, அப்பொழுது ஆசிரியர்களென்ருல் எவ்வளவு அச்சந்தெரியுமா! விறகு ஒடித்து வருவது முதல் வீட்டுவேலை செய்வது வரை எங்களுக்கு வேலை இருக்கும். ஆசிரியர் 'டேய்' என்று அழைத்தாலே எங்களுக்குக் கதி கலங்கிவிடும். நாங்கள், ஆசிரியர் காலாலிட்ட வேலையைத் தலையால் செய்வோம்'' என்றெல்லாம் இன்றும் சொல்வதைக் காது கொடுத்துத்துத் தான் கேட்டுக்கொண்டு வருகின்ருேம். ஆனல் இந்தக் காலத்து ஆசிரியர் சமுகம் வேண்டுவதெல்லாம் இத்தகையதொன்றல்ல. ஆசிரியர்கட்கிருக்கும் பெருமதிப்பு என்றும் அழிந்துவிடாது. என்றைக்கேனும் ஒருநாள் அவர்கள் மேல்நிலைக்கு வரத்தான் போகிருர்கள். இக்காலத்தின் ஆசிரியர்கள் அச்சத்தின் கீழாக மதிப்பையோ பெருமையையோ தேடிக்கொள்ள விரும்பவில்லை. உலகத்தோடொட்ட ஒழுகும் ஒரு நல்ல முறையை உணராதவர்களல்ல ஆசிரியர்கள். எவ்வதுறைவது உலகம் உலகத்தோடவ்வதுறைவதறிவு'' என்ற வள்ளுவன்வாக்கை மீண்டும், மீண்டும் சந்திக்க வாய்ப்புப் பெற்ற ஆசிரியர்களுக்கு இன்றைய அறிவியல் உலகத்தில் எப்படி நடந்துகொள்ள வேண்டுமென்று நன்ருகத் தெரியும்.

"கத்தியின்றிரத்தமின்றி யுத்தமொன்று வருகுது'' என்ற தத்துவத்தை — குறிக்கோளைப் படம் பிடித்துக் காட்டுவதற்கொப்ப அறப்போர் நடத்தும் அமைதியையே கைக்கொண்டு தன் கோரிக்கையைத் தெரிவிக்கும் ஒரு சமுகம் இந்த நாட்டிலே வாயற்ற பூச்சியாய் உலவுகிறதென்ருல், அது ஆசிரியர் சமுகமே என்பதை நம் நாட்டு அரசு இன்னும் உணராதது ஏனோ?

ஆசிரியர் சமுகம் பேசத் தெரியாதவர்களல்ல, போரிடத் தெரியாதவர்களல்ல, உலகத்தின் நீக்கும் போக்கும் தெரிந்து கொள்ளாதவர்களல்ல. ஆனல் பழி பாதகங்களுக்கஞ்சி வாழ்கின்றவர்கள் என்ற ஒரே காரணத்திற்காக அவர்களது பேச்சும், திறமையும் அடங்கிக் கிடக்கிறது. இல்லையேல் இன்று இந்த நாட்டில் இருக்கும் ஆசிரியர் பட்டாளங்கள் ஒன்று திரண்டு வீர அறப்போர் செய்தால், இந்தஉலகத்தில் எங்கு நோக்கினும் எதிரொலி வானைப் பிளக்கும். அவர்கள் படை அணி வகுத்துச் சென்ருல் இந்த மண்ணகத்திற்கே ஒரு அதிர்ச்சியுண்டாகும். "ஏழை அழுத கண்ணீர் கூரிய வாளையொக்கும்'' என்ற கருத்துப்படி அத்தனை ஆசிரியர்களும் துன்பநிலையிலிருந்து கொண்டு அழுதால் அவர்கள் விடும் கண்ணீர் இந்த ஞாலத்தையே கரைத்துவிடும். ஏழைகள் அல்லற்பட்டு அழுவதனல் ஏற்படுங் கண்ணீர் இந்த உலகத்தின் செல்வ நிலையையே தேய்த்துவிடும் படையாகும் என்பதை வள்ளுவன் ''அல்லற்பட் டாற்ருது அழுத கண்ணீ ரன்றே செல்வத்தைத் தேய்க்கும் படை,'' என்று ஏழைகளின் அவல நிலையை—இழி நிலையைப் பார்த்துணர்ந்து கூறியிருக்கும் நோக்கு எவருடைய உள்ளத்தையுந் தொடும். ஆனல் இந்த ஆசிரியர்கள் படுந்துயரந்தான் இன்று ஆட்சி செய்வோருடைய உள்ளத்தைத் தொடவில்லைப் போலும்!

என்று இந்த ஆசிரியர்களின் குறை நீங்குகிறதோ அன்றுதான் இந்த நாட்டின் குறை நீரும். ஆசிரியர்கள் மாணவர்களுக்குப் பாடம் பயிற்றும்போது பஞ்சப் பாட்டையும் கூடவே பாடுகின்ற நிலை ஏற்படுகிறது. படிக்கின்ற மாணவனும் படித்துவிட்ட பிறகு ஆசிரியர் அன்று பாடிய பஞ்சப் பாட்டை நாடா இசைத்தட்டை (Tape record) திருப்பிப் போடுவதுபோலத் திருப்பி நாட்டிலே பாட ஆரம்பிக்கின்ருன். இப்படியே எங்கும் பள்ளியிலிருந்து வெளியேறும் மாணவர்கள் இத்தகைய பஞ்சப் பாட்டைத்தான் பாடும் நிலையையடைகிருர்கள். இதன் காரணமாகவே எங்கெங்கும் எதெதிலும் பஞ்சப்பேய் தலைவிரித்து ஆடுகிறது. இந்தப் பஞ்சப்பேயை விரட்ட வேண்டுமானல், இதனைப்போக்க இன்றைய அரசு உண்மையிலேயே பாடுபடுகிறதென்ருல் முதன் முதலில் ஆசிரியர்கள் வீட்டிலே தாண்டவமாடும் பஞ்சப்பேயை — இழிநிலையை விரட்டியடிக்க ஆவன செய்ய வேண்டுமென்பதை இன்றைய அரசுக்கு நினைவுறுத்த விரும்புகிருேம். இனியேனும் இதையுணர்ந்து ஆசிரியர்ளுக்கு நல் வாழ்வுதர இந்த உலகத்தின் அறியாமைப் பசியைப் போக்கும் ஆசிரியரின் வயிற்றுப் பசியைப் போக்க அரசாங்கம் முன் வரவேண்டும். இல்லையேல் அவர்கள் வாழ்வு நிலை குன்றும். வாழ்வின் வளங் குன்றினல் ஊக்கமும் உழைப்பும் குன்றும். ஊக்கமும் உழைப்பும் குன்றினல் மாணவர்களது தரம் குன்றும். மாணவர்களது தரம் குறைந்தால் நம் நாட்டின் அடிப்படையான உறுதி குன்றும். அடிப்படைஉறுதியுள்ளதாக இருந்தால் தான் அதன்மீது எழுபப்பப்படும் பன்னிரண்டாண்டுகளாகப் பாடுபட்டு எழுப்பியது என்று கூறிக் கொண்டிருக்கும் சுதந்திர மாளிகை கலகலத்து ஆட்டங்கொடுக்காமல் இருக்கும். இல்லையேல் நாட்டின் முற்போக்குப் பிற்போக்காகத்தான அமையும் என்பதை அரசியல் தெரிந்த — ஆசிரியர்களின் அருமையுணர்ந்த—அறிவும் செறிவும் பெற்ற அனைவரும் உணர வேண்டுகிருேம்.




> கிராமப்புறத்திலே, புதிதாக உண்டாக்கப்பட்ட இரயில்வே ஸ்டேஷன்; அதன் அருகே இருந்த இரயில்வே கேட்டின் அதிபதி குப்பன்! அந்தக் கேட்டுக்காரக் குப்பனின் கதைதான் இது!

**ஆரூர்—ஆனந்தன்**

## —[1]—

"டேய் சுப்பு, நீதாண்டா என்ஜின், டேய் சுந்தர், கோபால், ஜெயராம். நீங்களெல்லாம் இரயில் பெட்டிகள், அடியே மருதி, நீதான் பெண்கள் இரயில்பெட்டி... அதோ... அந்தக் கேசவன்தான் கார்ட்... நான்தான் கேட்டுக்காரக் கந்தன்..." இப்படியாக உத்தரவு போட்டுக்கொண்டிருந்தான் கேட்டுக்காரக் குப்பனின் மகன், ஏழு வயதுச் சிறுவன் "பச்சைக் கொடிக் கந்தன்."

"அப்பாருக்குப் பிள்ளை தப்பாமல் பிறந்திருக்கு பார்... கேட்டுக்காரக் குப்பன் மகன் கேட்டுக்காரக் கந்தன்... தன் அப்பா வேலையைத் தானே எடுத்துக்கிருண்டான்..." என்று சுப்பன் அவனைக் கிண்டல் செய்தான். மற்றவர்கள் "ஹே!..." என்று கைகொட்டிச் சிரித்தனர்.

"டேய், நிறுத்துங்கடா... அப்பாரு வேலையைப் பிள்ளை செய்யக்கூடாதென்று எந்தச் சட்டத்திலே எழுதிவைச்சிருக்கு?... டேய் கந்தா நீ கேட்டுக்காரக்கந்தனுகவே இருடா ...நீ போய் உங்க அப்பா வைச்சிருக்கிற சிகப்புக்கொடி, பச்சைக் கொடி விசில் எல்லாவற்றையும் எடுத்துக்கொண்டு சீக்கிரமாய் ஓடி வாடா..." இப்படியாகக் கந்தனுக்குப் பரிந்துகொண்டு, மருதி பேசினுள்.

இவர்களின் இந்த உரையாடல்களைக் கேட்டுக்கொண்டுதான், கந்தனைப் பெற்றெடுத்த கேட்டுக்காரக் குப்பன் படுத்திருந்தான். அவன் தன் மனதிற்குள்ளாகவே பலவாறு சிந்திக்கலானுன். "நம்ம பிள்ளையும் கொடிகாட்டும் இந்த உத்தியோகத்துக்குத்தான் போவானு?... அவன் தலைவிதியும் அப்படித்தானு?... நானும் இந்த முப்பது வருஷமா இந்தக்கேட்டைப் பூட்டிக்கொண்டும், விசிலை அடித்துக்கொண்டும் பச்சைக்கொடியை வீசிக்கொண்டுந்தான் வாழ்ந்து வருகிறேன்... நான் என்ன சுகத்தைக் கண்டேன்... என்னுடைய எட்டுக் குழந்தைகளும்... வறுமையால் வாடுகின்றன. எனக்கு ஒரு வயிற்றுக்குக்கூடக் கஞ்சி சரியாக கிடைக்கவில்லை, கந்தனுக்கு மூத்த பிள்ளைகள் மூன்று பேரும் கூலிக்கு வேலை செய்து காலத்தைக் கடத்துகிருர்கள். ஒரு பெண் விதவைக் கோலத்திலே வீட்டிலே இருக்கிறது... மற்றொரு பெண்ணைக் கட்டிக்கொடுக்கவேண்டும், இளையவள்தான் ஏதோ வீட்டு வேலைகளைக் கவனித்து வருகிருள்... அவள் இல்லாவிட்டால்... அந்தக் கைக்குழந்தையை யார்தான் வைத்துக் கொள்வது?...கந்தனை மட்டும்தான் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பி வைத்தேன்... ஏ, முருகா!... உன் பெயரைத்தான் கந்தனுக்குச் சூட்டினேன்... அவனுக்காவது நல்ல உத்தியோகம் கிடைக்கும்படி அருள் செய்யமாட்டாயா?..." இப்படியெல்லாம் கேட்டுக்காரக் குப்பனின் சிந்தனை அலைகள் சுற்றிச் சுழன்றன,

இதற்குள்ளாகப் பச்சைக் கொடியைக் கையிலெடுத்துக் கொண்டு, விசிலை வாயில் வைத்துக்கொண்டு தெருவில் வந்து நின்ருன் கந்தன். அவனைக் கண்டதும் அவனது நண்பர்கள் யாவரும் இரயில் வண்டி விளையாட்டுக்குத் தயாராஞர்கள். சுப்பு "கூ...ஊ..." என்று ஊளையிட்டான், அவன் சட்டையைப் பிடித்துக்கொண்டு மற்ற நண்பர்கள் நின்றுகொண்டனர். எல்லோருக்கும் பின்னுல் மருதி நின்றுகொண்டு, "இது பெண்கள் வண்டி....இதிலே பெண்கள்தான் ஏறலாம்,....." என்று கத்தினுள்.

காசு பணம் செலவில்லாமல் சித்தரஞ்சன் என்ஜினில்லாமல், பெரம்பூர் பெட்டியில்லாமல் ஒரு விஞடியில் இரயில் வண்டி தயாராகிவிட்டது. "ஊ......ஊ......" என்று சுப்பு கத்திஞன். "டேய்,.... கார்டு கொடி காட்டாமல் விசிலடிக்காமல்... நீ பாட்டுக்கு எப்படியடா ஊதலாம்?..." என்று கார்ட் கேசவன் கத்திஞன்.

"டே முட்டாள்களா... சீக்கிரம் விசிலடித்துத் தொலையேண்டா..." சுப்பு பொறுமையை இழந்து பேசிஞன்.

"டேய் முட்டாள்களா... இன்னும் கேட்டுச் சாத்தாமல் தூங்கிக் கொண்டிருக்கிருன்-இந்தக்கேட்டுக் காரப்பச்சைக்கொடிக்கந்தன், அவன் பச்சைக்கொடிகாட்டினுல் தானேடா லையனெல்லாம் ஒழுங்கா இருக்கிற

தாக அர்த்தம். நீபோட்டுக்கு போனால்... அப்புறம் ஏதாவது பிளசர் கார் வந்து மோதிவிடும்...'' இப்படி எச்சரித்தாள் மருதி. மருதியைக் கேட்டால், கேட்டுக்காரக் கந்தனின் உத்தியோகம்தான் எல்லோருடைய உத்தியோகத்தையும்விடத் தலைசிறந்ததென்பாள்.

தொலைவிலே நின்ற கந்தன் கேட்டை இழுத்துப் பூட்டுவது போல் பாவனை செய்தான்; பிறகு விசிலடித்து விட்டுப் பச்சைக் கொடியை வீசினான். ஒருவன் தகர டப்பா ஒன்றை "டப்...டப்... டப்'' என்று மணியடிப்பதுபோல் தட்டினான். கேசவன் கார்ட் விசிலடித்துக்கொண்டே பச்சைக் கொடியை வீசினான். இரயில் வண்டி ஊ... வென விசிலடித்துக் கொண்டே புறப்பட்டது. மருதி கேட்டுக்காரக் கந்தனைத் தாண்டும் போது கையை ஆட்டி ஆரவாரம் செய்தாள்.

இரயில் வெகுதூரம் சென்று விட்டு மறுபடியும் திரும்பியது. கேட்டுக்காரக் கந்தன் அவசர அவசரமாகக் கேட்டை இழுத்துப் பூட்டுவதுபோல் பாவனை செய்தான். அதற்குள் அடுத்த வீட்டு அம்மாஞ்சி, கேட்டுக்காரக்கந்தனைத் தாண்டி அவசர அவசரமாக ஓட முயன்றான். கந்தன் அவனை விட்டுவிடுவானா என்ன?... அவன் அம்மாஞ்சியைப் பிடித்து இழுத்துக் கொண்டான். இரயில்வண்டி அப்பால் சென்றவுடன், அம்மாஞ்சிக்கு இரண்டு உதை கொடுத்தான்.

"டேய் மடையா... இரயில் வருவது கண்ணு தெரியலை... கேட் சாத்தியிருக்கும் பொழுது நீ பாட்டுக்கு எருமை மாடாட்டம் வந்து விழுறியே...''என்று கர்ஜனை புரிந்தான கந்தன்.

"டேய்... எருமை மாடு கிருமை மாடு அப்படி இப்படீன்னு ஏதாவது வம்பு இழுத்தாயோ...ஆமா ...தோலை உரித்து விடுவேன், பல்லைத்தட்டிவிடுவேன்...ஆமா...'' எனப் பதிலுக்குப்பதில் அம்மாஞ்சி சத்தம் போட்டான்.

சிறிது நேரத்தில் அம்மாஞ்சிக்கும் கந்தனுக்கும் பெரிய சண்டையே ஏற்பட்டுவிட்டது. கந்தன் தன் கையிலிருந்த பச்சைக்கொடியால் அம்மாஞ்சியின் முதுகில் ஓங்கி ஓங்கி அடித்தான். அம்மாஞ்சி "ஐயோ அப்பா, அம்மா...''என்று கத்தினான்.

இந்தக் கூக்குரலைக்கேட்டுக் கந்தனின் தந்தை குப்பன் அங்கு ஓடிவந்தான்.

"அட பாவிப்பய மவனே... நீ கூட இந்தக் கொடி காட்டும் உத்தியோகத்துக்குப் போயீ... சதா... இந்த பிளசர் கார் சீமான்களோடே சண்டை போடவா போறே... அடப்பாவி... இந்தப் பச்சைக் கொடியை ஏண்டா இப்படிக் கிழித்தே?'' கந்தனின் முதுகில் 'பளார்...பளார்...'' என இரண்டு வைத்துக்கொண்டே குப்பன் இங்ஙனம் கூறினான்.

கந்தன் அழுதுகொண்டே ஓடிப் போய்த் தமிழ்ப்பாட புத்தகத்தை எடுத்து "சிவப்புக் கொடி'' என்ற பாடத்தை வாய்விட்டு அழுது கொண்டே படித்தான்.

"இரயில் பாதை உடைந்திருப்பதைச் சிறுவன் கண்டான். தன் சட்டையைக் கழற்றி சிவப்புக் கொடியைத் தயார் செய்தான். இரயில்வே பாதையின் நடுவே நின்றுகொண்டு சிவப்புக்கொடியை ஆட்டி இரயிலை நிறுத்தி ஏராளமான உயிர்களைக் காப்பாற்றினான். அந்தச் சிறுவனை, அந்த நாட்டு மந்திரி முதல் எல்லோரும் பாராட்டினார்கள்...''

இதைக்கேட்ட குப்பன் எண்ணினான், "இவன் விளையாடும்போதும் இரயில் விளையாட்டுத்தான் விளையாடுகிறான், படிக்கும்போதும் இரயில் பாடந்தான் படிக்கிறான். "அப்பனுக்கு பிள்ளை தப்பாமல் பிறந்திருக்கு'' என்ற பழமொழியை இவன் நிரூபித்துவிடுவான் போலிருக்கே...''

பாடத்தைப் படித்துக்கொண்டே ஏழு வயதுக் கந்தன் எண்ணினான். "அவன் சிவப்புக் கொடியைக் காட்டி நல்ல பெயர் வாங்கினான்... எனக்கு அந்தச்சிவப்புக்கொடியைக் கண்டாலே பிடிப்பதில்லை... நான் பச்சைக்கொடியைக் காட்டிப் பெயர் எடுக்கிறேன் பார்!...''

## —[2]—

பிளசரிலே பறந்து செல்லும் கோடீசுவரனானாலும் சரி, பஸ்ஸிலே பிரயாணம்செய்யும்சாதாரணமனிதனானாலும் சரி, சைக்கிளிலே செல்லும் குமாஸ்தாவானாலும் சரி, கட்டை வண்டியிலே ஊர்ந்து செல்லும் கிராமத்தானானாலும் சரி, எல்லோருக்கும் இந்தக் கேட்டுக்காரக் குப்பனின் தயவு வேண்டியிருந்தது. பஸ் ஸ்டாண்டிற்கு வந்த பஸ் கண்டக்டர், குப்பனின் பெயரை ஜபம் பண்ணுவார்.

"டிரைவர்...டிரைவர் நீ காரை எடப்பா...மற்ற டிக்கெட்டையெல்லாம் இரயில் கேட்டுக்கு அப்பால போய்ப் போட்டுக்கலாம்... அந்தக் குருட்டுக் கேட்டுக்காரக் குப்பன்... பொல்லாதவன்...இரயில் வருவதற்கு அரைமணி நேரம் முன்பாகவே கேட்டை இழுத்துப் பூட்டி விடுவான்...பஸ்ஸை வேகமாகவே... எடப்பா...எடு'' என்று ஒவ்வொரு நாளும் அந்தக் கண்டக்டர் டிரைவரை அவசரப்படுத்துவார். ஆனால் அவர்கள் எவ்வளவு வேகமாக வந்தாலும் இரயில் கேட், முன்பே இழுத்துப் பூட்டப்பட்டிருக்கும்.

கேட்டுக்குள்ளே மகாராஜா மாதிரி அதோ குப்பன் நிற்கிறான் பாருங்கள்... அவன் பின்னால் எத்தனை சீமான்களும், சீமாட்டிகளும் தங்கள் அழகிய மோட்டார் வாகனங்களுடன் காத்திருக்கிறார்கள், அட... அந்தக் கோடீசுவரர் குபேரநாதர்கூடக் காத்திருக்கிறாரே... குபேரநாதரோ தஞ்சை நந்தியைப் போல் கொழு கொழுவென வளர்ந்த தோற்றமும், மத்தளம் போல் பருத்த தோள்களும், பீப்பாய் போன்ற தள்ளிய தொந்தியும் குரூரமான சிவந்த கண்களையும், நறுக்கு மீசையையும் வைத்துக் கொண்டு கோதா குஸ்தி பயின்ற பெரிய பயில்வான் போன்று தன் உடல் பலம் பணபலம், செல்வாக்கு இவைகளின் துணையும் முரட்டு அடியாள் கூட்டத்தின் வீராப்பையும் வைத்துக்கொண்டு தட்டிக் கேட்க ஆளில்லாத தன் பிராந்தியத்தில் தனிமரமாக வளர்ந்து வருபவர். குழந்தை குட்டி இம்மாதிரி பிடுங்கல் ஏதுவும் இல்லாத தனிக்கட்டை அவரது கட்டளையை அல்லது இச்சையை, அது எந்தப் பஞ்சமா பாதகமாக இருந்தாலும் சரி அவர் குறிப்பிடும் நேரத்தில், இடத்தில் தன்னிஷ்டப்படி செய்து முடிக்கும் அடியாள் கூட்டங்களைச் சதா தன் புடை சூழ வைத்துக்கொண்டு பல கொலைகளையும், பஞ்சமா பாதகங்களையும் அன்றாட சேவையாக வைத்துக் கொண்டு ஊரானை

அடக்கி, ஒடுக்கி ஓர் காட்டு ராஜா வாழ்க்கை வாழ்ந்து வந்தார். அவருக்காக...அரசாங்கமே நடு நடுங்கும்...ஆனால் அவர் கூடக்கேட்டுக்காரக் குப்பனின் பின்னால் பொறுமையாக நிற்கவேண்டியிருக்கிறது. "என்ன குப்பா...வண்டி வருவதற்கு நேரம் அதிகமிருக்கும் போலிருக்கே,...கொஞ்சம தயவு செய்யேன், நான் அவசரமாகப் போகணும்...ஒரு விநாடி கதவைத் திறந்தால் ஓடிப் போயிடுவேன்..." குபேரநாதர் குப்பனைக் கெஞ்சினார்.

"அதெல்லாம் ஆபத்துங்க... வண்டி வந்துவிட்டால் ... என்ன செய்வது? துரதிருஷ்டவசமாக உங்க மோட்டார்கார் லைனிலே படுத்துக்கொண்டா... பெரிய விபத்து ஏற்பட்டு விடுமே..." குப்பன் அவருக்குச் சமாதானமாகப் பதில் கூறினான்.

"என்ன குப்பா... என்னைத்தெரியாததுபோல் பேசறே ... என் காரைப்போல இந்தியாவிலேயே கார் கிடையாதே! மின்னல் மாதிரி லைனைத் தாண்டிச் செல்லமாட்டேனா? ரொம்ப அவசரமான வேலை! சிறிது தாமதித்தால் ஆயிரக்கணக்கில் நஷ்டம் வந்து விடும்; கொஞ்சம் தயவு பண்ணு... இதோ இந்தப் பத்து ரூபாயைக் கையிலே வச்சுக்கோ" குபேரநாதர் குழைந்தார்.

பத்து ரூபாய் நோட்டைக் கண்டு வெகு நாட்களாகியது குப்பனுக்கு. வீட்டிலே அரிசி வாங்கப் பணமில்லையென்று அவன் மனைவி கூறியது நினைவிற்கு வந்தது. இரண்டு, மூன்று நாட்களாக ஒரு வேளை சாப்பாடுதான் அவனுக்குக் கிடைத்தது. வண்டி வருவதற்குக் குறைந்தது பதினைந்து நிமிடமாவது ஆகும்... அதற்குள் குபேரநாதர் பதினைந்து மைல் போய்விடுவார். ஆனால் கடமை தவறுவதற்குக் குப்பன் விரும்பவில்லை. "அதெல்லாம் சட்டமின்னு எல்லாருக்கும் சட்டந்தாங்க; உங்க முகத்துக்காக நான் இன்று கேட்டைத் திறந்துவிட்டால், நாளைக்கு வண்டி தொலைவில் வரும்பொழுது கூடக் கேட்டைத் திறக்கும்படி இன்னொருத்தன் உத்தரவு போடுவான்...... அப்புறம் நாளைக்கு என் சீட்டுக் கிழிந்து விடுமே..." குப்பன் கண்டிப்பாகக் கூறினான். குபேரநாதர் பல்லை நறநறவென்று கடித்துக்கொண்டார்.

அவருக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. தன்னுடைய காரைச் சுற்றிச் சுற்றி வலம் வந்தார்.

"மந்திரிகளெல்லாம் என் தயவைநாடுகிறார்கள், இந்தப் பயல் என்னடான்னா துள்ளிக் குதிக்கிறான். எத்தனையோ திட்டங்கள் வருகுது, போகுது. ஆனால் இங்கே ஒரு பாதாள ரோடு வர மாட்டேங்கிறதே' பாலம் ஒன்றைக் கட்டிவிட்டால் ... இந்தப் பயல் தயவு நமக்கெதற்கு?" இப்படியெல்லாம் அவர் சிந்திக்கலானார்.

ஐந்து நிமிடமாச்சு, பத்து நிமிடமாச்சு; ஆனால் இரயில் வந்த பாட்டைக் காணோம். குபேரநாதர் முகம் ஆத்திரத்தால் சிவந்தது. "டேய்...குப்பா இந்தக் குபேரநாதனை விரோதித்துக்கொண்டு வாழ்ந்தவன் கிடையாதுடா... கேட்டைத்திறந்துவிட்டுடா! இந்நேரம் இருபது மைல் போயிருப்பேன்" குபேரநாதர் கூறினார். குப்பன் கையிலே உள்ள பச்சைக் கொடியை அலட்சியமாகக் காற்றில் ஆட்டிக்கொண்டு நின்று கொண்டிருந்தான்.

"டேய் ... குப்பா ... கேட்டைத் திறந்துவிடப் போறியா அல்லது கேட்டை உடைத்துக்கொண்டு போகட்டுமா?" குபேரநாதர் கர்ஜித்தார்.

"முடியுமானால்... கேட்டை உடைத்துக்கொண்டு போங்களேன், என்னுடைய கேட்டா என்ன?...' அலட்சியமாகக் குப்பன் கூறினான். குப்பென்று காரில் தாவி உட்கார்ந்து, குபேரநாதர் காரைக் கிளப்பினார். பின்னாலேயே சிறிது தூரம் சென்று மிகமிக வேகமாகக்கேட்டைநோக்கிக் காரை விட்டார். அதற்குள் ஊ... என்ற இரயில் சத்தம் தொலைவில் கேட்டது. பெரியதொரு விபத்து நேரப்போகிறதெனக் கூடியிருந்தோர் எதிர்பார்த்தனர், குப்பன் ஓடிப் போய்ச் சிகப்புக்கொடியை எடுத்து இரயிலை நிறுத்துவதற்காக வீசினான். இரயிலின் விசில்சப்தத்தைக் கேட்டகுபேரநாதர் நல்லவேளையாகத் திடீரெனப் பிரேக்கைப்போட்டு காரை நிறுத்தினார். கார் இரயில் கேட்டில் மோதிநிற்பதுபோல் நின்றது. குப்பனும் சிகப்புக் கொடியை கீழே போட்டுவிட்டுப் பச்சைக் கொடியை வீசினான். இரயில் எந்த விதஆபத்துக்கும் ஆளாகாமல் ஸ்டேஷனை அடைந்தது.

இரயில் கேட் திறக்கப்பட்டதும் குபேரநாதர் ஒரே தாவில் காரில் ஏறி அமர்ந்தார். மின்னல் வேகத்தில் கார், புழுதியைக் கிளப்பிக்கொண்டு புறப்பட்டது. அது போகும்போது குப்பனை உராய்ந்தாற்போல் சென்றது. அது அப்படிப் போனதானது, "கொடிகாட்டும் குப்பா... உனக்கு இவ்வளவு கர்வமா?..." என்று கேட்பது போலிருந்தது.

## —[3]—

வறுமையில் வாடி இறக்க நேர்ந்தாலும், தன் கடமையில் தவறக் குப்பனுக்கு மனமில்லை, இங்ஙனம் தன் கடமையில்எள்ளளவும் தவறுமலேயே முப்பது ஆண்டுகள் இரயில்வேக்குஉழைத்திருக்கிறான். இந்த இரண்டு, மூன்று ஆண்டுகளாகத்தான், தன் வேலைகளைச் செய்ய மிகவும் கஷ்டப்பட்டான்.

மாதக் கடைசியாதலால் குப்பன் வீட்டு வறுமை உச்ச நிலையை அடைந்தது. அன்று முழுவதும் அவன்பட்டினி.கைக்குழந்தைக்குப் பால் வாங்கக்கூடப் பணமில்லை. அது "வீல்... வீல்..." எனக் கத்தியது. மற்றக் குழந்தைகளும் பசியால் கத்த ஆரம்பித்தன.

சிறிது நேரம் குபேர நாதருக்குக் கேட்டைத் திறந்துவிட்டிருந்தால் பத்து ரூபாய் அவனுக்குக் கிடைத்திருக்கும். குழந்தைகளுக்கு இரண்டு நாளைக்காவது வயிறார உணவு கிடைத்திருக்கும்.

ஆனால் வறுமையிலும் செம்மையாக வாழ்வதுதான் சிறந்ததென்ற உயர்ந்த கொள்கையை உடையவன் குப்பன். கவலையோடு உட்கார்ந்திருந்தான். இரவு 11 மணிக்கு வரும் எக்ஸ்பிரஸ் வண்டி 75 நிமிடம் நேரங்கழித்து வருவதால், பசி மயக்கத்தையும் பொருட்படுத்தாது கண்விழித்துக்கொண்டிருந்தான். தூரத்திலே ஒரு கருப்பு உருவம் பதுங்கிப்பதுங்கி இரயில்வேலைனில் வருவதை அவன் கவனித்துவிட்டான். உடனேகொடியைக்கையிலே எடுத்துக்கொண்டு பதுங்கிப் பதுங்கி அந்த உருவத்தைப் பின் தொடர்ந்தான். அந்த உருவம், சிறிது தூரம் சென்று அங்கே உள்ள இரயில்வே லைனைப் பெயர்க்கும் வேலையில் முற்பட்டது. தன் கையிலிருந்த கொடியால் ஓங்கி அந்த உருவத்தின் தலையில் அடித்தான். அந்த உருவம் திடீரெனப்

பாய்ந்து அவனது கையைப் பிடித்துக்கொண்டது.

தூரத்தில் உள்ள விளக்கிலிருந்து வந்த மங்கிய ஒளியில் அந்த ஆள் குபேரநாதர் வீட்டு வேலைக்காரனென்பதைக் குப்பன் கண்டுகொண்டான். இருவருக்கும் சிறிது நேரத்தில் பலத்த சண்டை நடைபெற்றது. பசி மயக்கத்தினால் குப்பனால் வேலைக்காரனின் மின்னல் வேகத் தாக்குதல்களைத் தாங்கமுடியவில்லை. குப்பனின் மண்டையில் பலமான அடி விழுந்ததும் குப்பன் திடீரெனக் குனிந்து; கீழே கிடந்த கற்களையெடுத்து சற்றும் எதிர்பாராத வகையில் அந்த வேலைக்காரன்மீது, மின்னல் வேகத்தில் வீசினான். குப்பன் கற்கள் வேலைக்காரனை மயக்கமடைந்து கீழே விழ வைத்தன.

சிறிது நேரத்தில் எக்ஸ்பிரஸ் வண்டி ஒருவித ஆபத்துமின்றி ஸ்டேஷனைப் போய் அடைந்தது. வண்டியிலுள்ள அத்தனை உயிர்களையும் காப்பாற்றிய குப்பன் கேட்டைத் திறந்து விட்டுவிட்டுப் பசி மயக்கத்தாலும், மண்டையிலே பட்ட காயத்திலிருந்து கசியும் இரத்த வெள்ளத்தினாலேற்பட்ட மயக்கத்தினாலும், சோர்ந்து தன் கூடாரத்தில் படுத்தான்.

வலி தாங்காது குப்பன் முணுமுணுத்துக்கொண்டே படுத்திருந்தான். வெகுநேரம் வரை அவனுக்குத் தூக்கம் வரவில்லை. குபேரநாதரை விரோதித்துக்கொண்ட அவன் இனி எவ்வளவு நாளைக்குத்தான் உயிரோடு வாழமுடியும். குப்பனை வேலையைவிட்டு நீக்குவதற்காகத்தான் வேலைக்காரனை விட்டு இரயில்வே லைனைப் பெயர்க்கச் சொல்லியிருக்கிறார். குப்பன் தான் குபேரநாதருக்கு விரோதமென்றால் இரயிலிலே வருகின்ற நூற்றுக்கணக்கான பிரயாணிகள் அவரை என்ன செய்தார்கள்?... குப்பனைத் தண்டிக்க நினைத்த குபேரநாதர் இரயிலைக் கவிழ்த்துத்தானா செய்ய வேண்டும்?... இதெல்லாம் பழி வாங்கும் நோக்கங்கொண்ட குபேரநாதருக்கு எப்படிப் புரியும்?

எல்லோருடைய உயிரையும் காப்பாற்றிய குப்பன் கவனிப்பாரற்று முணுமுணுத்துக்கொண்டே படுத்திருந்தான். குப்பனைத் தண்டிப்பதற்காக இரயிலையே கவிழ்த்து நூற்றுக்கணக்கான மக்களின் உயிரைப் போக்க நினைத்த குபேரநாதர் பட்டு மெத்தையிலே பணிப் பெண்கள் சூழ அமைதியாகத் தூங்கிக்கொண்டிருந்தார். பசி தாங்க முடியாமல் தண்ணீரைக் குடித்துக் குடித்து கந்தனுக்கு ஜுரம் வந்துவிட்டது. "அம்மா... பசி...பசி" என்று கத்திக்கொண்டேயிருந்த குப்பனின் குழந்தைகள் அங்ஙனம் கத்துவதற்கும் சக்தியிழந்து மயக்கமாகக் கிடந்தன.

## -[4]-

குப்பனின் மகனாகிய ஏழு வயதே நிரம்பிய சிறுவன் கந்தன் கையிலே எப்பொழுதுமே ஒரு பச்சைக் கொடி இருக்கும். கந்தனை இதனால் சிலர் "பச்சைக் கொடி" என்ற பெயர் வைத்துக்கூட அழைப்பதுண்டு. ஜுர வேகத்திலே படுத்திருந்தகந்தன், படுக்கையிலேகூடப் பச்சைக் கொடியை கையிலேந்தியவாறு படுத்திருந்தான். இரவு முழுவதும் ஜுர வேகத்தில் பிதற்றிக்கொண்டே படுத்திருந்தான்.

பொழுது விடிந்ததும் ஜுரம் கொஞ்சம் தணிந்திருந்தது. அவன் கண் விழித்துப் பார்க்கும்பொழுது எல்லோரும் தூங்கிக்கொண்டு இருந்தார்கள். கையிலே இருந்த பச்சைக் கொடியை வீசினான். திடீரெனகந்தனுக்குத் தன் அப்பாவின் நினைப்பு வந்தது. அப்பாவிடம் போனால் இட்லி வாங்கிகொடுப்பாரென அவன் எண்ணினான். உடனே பச்சைக் கொடியை எடுத்துக்கொண்டு அப்பாவின் கூடாரத்திற்கு ஓடினான்.

மண்டையில் பட்ட காயத்தினால் அப்பா அயர்ந்து தூங்கிக்கொண்டிருப்பதைக் கண்டான். அப்பொழுது ஸ்டேஷனிலே மணியடித்தது. காலை மணி ஏழு இருக்கும். அடடே... இப்பொழுது மெயில் வருகிற நேரமாச்சே... விசிலை எடுத்துக்கொண்டு வெளியே ஓடி வந்தான் கந்தன். ஸ்டேஷன் மாஸ்டர் பிளாட்பாரத்தில் இருந்து கொண்டு விசிலை ஊதினார். கந்தனும் பதிலுக்கு விசிலை ஊதினான். ஸ்டேஷன் மாஸ்டர் பச்சைக் கொடியை உயரத் தூக்கி வீசினார். கந்தனும் பச்சைக்கொடியைஉயரத் தூக்கி பதிலுக்கு வீசினான். ஆனால் பாவம்! அவனால் கேட்டை இழுத்துச் சாத்தமுடியவில்லை. மிகமிக முயன்று கேட்டைத் தள்ள முயன்றான். அவனால்கேட்டை அசைக்கக்கூட முடியவில்லை." எப்படியாவது கேட்டைச் சாத்திவிடுவது" எனத் தீரமானித்துக்கொண்டு தன் உடல் பலம் முழுவதும் பயன்படுத்தி கேட்டைத் தள்ளினான். ஆனால் பாவம்! சிறிது தூரம் அசைந்த கேட், திரும்ப வேகமாக வந்து கந்தன்மேல் மோதியது. இரவெல்லாம் ஜுரத்தால் அவதிப்பட்ட, ஏழுவயதுச் சிறுவன் கந்தனால் அவ்வளவு பெரிய கேட்டினுடைய அடியைத் தாங்க இயலவில்லை. அப்படியே மயங்கிக் கீழே விழுந்தான். நல்ல வேளை இரயில்வே லயனில் விழவில்லை.

சிறிது நேரத்தில் மெயில் வண்டி வேகமாக வந்துக்கொண்டிருந்த சப்தம் மட்டும் அவன் காதில் விழுந்தது. "குப்பனின் கதி என்னவாகியது, இரவு எக்ஸ்பிரஸ் எங்கே கவிழ்ந்தது?" இதைப்பற்றி எல்லாம் குபேரநாதர் சிறிதும் கவலைப்படவில்லை. பொழுது விடிவதற்கு முன்பே அவரைச் சாவோலை வரவேற்றது ... தன் அத்தை ஜுரமாக இருக்கிறாள் என்ற தந்தியைப் பார்த்த அவர், தானே காரை எடுத்துக்கொண்டு, கிராமத்தை நோக்கி மின்னல் வேகத்தில் செலுத்தினார். ஓராயிரம் அந்நியர் இறந்து போவதைப் பற்றி அவருக்குக் கவலையென்ன? ஆனால் தனது உயிருக்கு உயிராக அத்தை இறந்துபோவதா?...... அவருடைய கார் மிகமிக வேகமாகக் காற்றைக் கிழித்துக் கொண்டு கிளம்பியது.

ரோட்டின் ஓரத்திலே அடிபட்டுக்கிடந்த கந்தன், கேட்டைச் சாத்தாவிட்டாலும், கார் வண்டி ஏதாவது வந்தால் நிறுத்திவிடலாமென்ற நம்பிக்கையில் படுத்திருந்தான். ஜுரத்தில் பிதற்றிக் கொண்டிருக்கும் தன் அத்தையின் நினைவாகவே வரும் குபேரநாதருக்கு மெயில் வண்டி வரும் சப்தம்கூடக்கேட்கவில்லை. "மேலும் இரயில் பாதையைச் செப்பனிடக் குறைந்தது ஒரு நாளாவது ஆகும். அது வரையில் வண்டி எங்கே வரப்போகிறது..." என்ற எண்ணம்.

காரை மிகமிக வேகமாக ஓட்டிக்கொண்டு வந்தார்; கந்தன் கூப்பிடுவதைக்கூட அவர் கவனிக்கவில்லை. ஆனால் இரயில்வே கேட்டைத் தாண்டி லைன்மீது அவர் கார் செல்லும்போது, அவரது காரின் ஒரு சக்கரம் கழன்று ஓடியது... அப்படியே இரயில்வே லைன் மீது அவரது கார் நின்றுவிட்டது.

(12-ம் பக்கம் பார்க்க)

# “பாலைக்கலியிலே அரசியல்”

[ வ. கிருஷ்ணன் ]

பல்வேறு துறைகளில் வன்மை வாய்ந்த பாவலர்களில் ‘பாலைபாடிய பெருங்கடுங்கோ’ என்பவரும் ஒருவர். அவர் பாடிய பாலைக்கலியில் இன்ப மூட்டும் உவமைகள் பல காணப்படுகின்றன. அவற்றுள் அரசியல் உவமைகள் தற்கால ஆட்சியாளர்க்கும் அறிவுரையாக விளங்குவதாகக் கூறலாம்.

வாழ்க்கை வளமாகப் பொருள் பெரிதும் அவசியமானது. திருவள்ளுவப் பெருந்தகையாரும், பொருள் இல்லார்க்கு இவ்வுலகம் இல்லையெனமொழிந்தார். எனவே அப்பொருளைத் தேடும் பொருட்டுக் கைப்பிடித்த கன்னியை விட்டுச்செல்ல எண்ணுகிறான் தலைவன். இச்செய்தியை அறிந்த தலைவிக்குத் துன்பம் பெருகுகிறது. துன்பத்தைப்போக்கத் துணைவி துணைசெய்ய முயலுகிறாள்.

பிரிந்துசெல்லும் தலைவனிடம் சென்று தலைவி கொண்டுள்ள அன்பு, அவனை விட்டுப் பிரிந்தால் ஏற்படும் துன்பம், பொருளின் நிலையற்ற தன்மை, செல்லும் வழியின் கொடுமை முதலியனவற்றை உவமை வாயிலாக உணர்த்துகிறாள்.

பரந்த அறிவுள்ள அவள், அரசியலில் நெறி தவறி நடப்போர் நிலையினையும், அவர்தம் நாட்டினையும் எடுத்துக் காட்டாகக் காட்டுகிறாள். “தலைவனே! மக்களுக்குத் துன்பம் நேராமல் காத்துக் கொள்வது மாட்சிமை மிக்க ஆட்சியாளர் கடமையாகும். ஆனால் அவர்களே அம்மக்களை எல்லையின்றித் தொல்லைப்படுத்தினால், நாடு பாழாகாமல் இருக்குமா? அந்த ஆள்வோர் மக்களுக்குச் செய்யும் கொடுமை போலவே நீயும் தலைவிக்குக்கொடுமை செய்கிறாய். அவள் முகத்தை இன்பத்தோடு பொலிவுறச் செய்வது உன் பொறுப்பு. ஆனால் துன்பத்தோடு நலிவுறச் செய்கிறாய்! இது நேரிதா? உன்னைப் பிரிந்து வாழ்வாளோ!” என்னும் பொருள்பட வினவுகிறாள். அதனையே பெருங்கடுங்கோ தோழி வாயிலாக;

“ஆள்பவர் கலக்குற அலைபெற்ற நாடுபோல
பாழ்பட்ட முகத்தோடு பைதல்
கொண்டமைவளோ!”

என்று புலப்படுத்துகிறார்.

நாட்டு மக்கள் நல்வாழ்வு வாழ அமைச்சர்கள் திறம் பெற்றவராக இருத்தல்வேண்டும். நாட்டுக்கு இது நல்லது, அல்லது இதுஎன்று நடுநிலையோடு மன்னனுக்கு எடுத்துக்கூறவேண்டும். தீயதைச் செய்ய எண்ணும் காவலனுக்குத்தீயதின் கொடுமையைக்காட்டி இடித்துரைக்கவும் தயங்கக்கூடாது. இதையறிந்துதான் வள்ளுவர், போன்ற சான்றோர்களும் தத்தம் தங்கக் கவிகளில் அமைச்சரின் சிறப்பை ஏற்றிப் போற்றுகின்றனர். நல்ல அமைச்சன் வாழும் நாட்டில் கொடுமை நிலவாதென்று உறுதியாகக் கூறலாம்.

அமைச்சன் நடுநிலையற்றவனாக இருந்து, அவன் வாயுரைகளையும், அரசன் கேட்டு, ஆட்சி நடத்தினால் மன்னன்காக்கும் கடமையில் தவறியவனாவான். அவன் செங்கோல் கொடுங்கோலாகும்; மதிப்புமிக்க மக்கள் மட்டற்ற துயரடைவர். இதனை அனுபவ வாயிலாக உணர்ந்த ஆசிரியர் தோழியின் உரையாகக் கூறுகின்றார்.

“பிரிந்து செல்லும் தலைவனே! நீவிர் செல்லும் காடு தாங்கமுடியா வெப்பம் வாய்ந்தது. நடுநிலையில்லாத அமைச்சன் சொல்லினையேற்று ஆட்சி நடத்தும் மன்னவன் கோல் போல, கதிரவன் சினம் காட்டுகிறான்.” செம்மை சான்ற நீ அந்த வெம்மை நிலத்தில் செல்லலாமோ? என்று வினவுவதுபோல் உள்ளது “அதுவே”

“நடுவிகந்து ஒரீஇ நயனில்லான்
வினைவாங்க
கோடிது ஓர்த்த மன்னவன்
கோல்போல ஞாயிறு
கடுகுபு கதிர்மூட்டி காய்சினம்
தெறுதலின்”

என்று பாலைக்கலி காட்டுகிறது.

பொது வாழ்வில் தொண்டாற்றும் பொதுநல ஊழியர்களுக்குத் தூற்றுதலும்போற்றுதலும்கிட்டுவதுஇயல்பு. தூற்றுவதையும் போற்றுவதையும் பொருட்படுத்தாமல், தன் கடமையை முறையாக நிறைவேற்ற முயல்பவனே உண்மை ஊழியன்; அவ்வாறு வாழ்த்தையும் வசைவையும் நோக்காமல் வாழ்ந்த பழந் தமிழர்கள் பண்டைத் தமிழகத்தில் பலருண்டு. அத்தகைய தன்னலமற்ற ஆன்றோர்களைப் போற்றிக் காப்பது ஆள்வோரின் பொறுப்பான செயலாகும். அவர் அறியாமல் செய்த சிறு தவறை பெரிதாக்கி ஆற்றிய பெருந் தொண்டை மறைத்து, அவரை ஒறுக்கும் மன்னவன் ஆட்சி நிலைக்காது. பொருளின் நிலையாமையை உணர்த்த வந்த தோழி, இதனையே உவமை காட்டுகிறாள். “பொருளாசை கொண்ட தலைவ! தன்னலம் கருதாமல் நாட்டு வாழ்விலேயே நாட்டங் கொண்ட நல்லவரின் வல்லமையைக் கருதாமல், அவர் செய்த சிறு தவறுக்காகக் கொலைத் தண்டனை கொடுக்கும் மன்னவன் ஆட்சி நிலைக்காது. அதுபோல பொருளும் நிலையாது. அதனையும் அறிஞர்கள் விரும்புவார்களா?” அக்கருத்தையே.

புரைதவப்பயன் நோக்கார் தம்மாக்கம்
முயல்வாரை
உரைவின்றிச் செறும் பொழுதல்
கண்ணோடாது உயிர் வௌவும்
அரை சினும் நிலையிலாப் பொருளையும்
நச்சபவோ?

என்று செந்தமிழால் பண்ணிசைத்தாள்.

தலைவன் செல்லும் வழியில் மரங்களும் செடிகளும் கதிரவன் வெப்பத்தால் வாடியுள்ளதென்றும், அவ்வழி மிகக் கொடுமையானதென்றும் உணர்த்தவந்த தோழி, நெறி தவறி நடக்கும் மன்னனது நாட்டைக் காட்டாகக் காட்டுகிறாள்.

குடிமக்கள் அனைவரும் துன்பத்தால் அல்லலடைகின்றனர். அவர் வாழ்வில் வளம் குன்றியிருக்கிறது. அதனை நன்குணராத மன்னவன், அம்மக்கள் கதறும்படி அவர்தம்

பொருள்களைச் சிறிதும் முறையின்றி கவர்கிறான். அத்தகைய கொடுங்கோலாட்சிபோல் கதிரவன் வெப்ப மூட்டுகிறான். இவ்வாட்சியில் மக்கள் வாடுவதுபோல் ஞாயிற்றின் வெம்மையில் மரங்கள் உலர்ந்துள்ளன.

மரங்கள் வாடும்படி வெம்மையனல் வீசும்வழி! அவ்வழியில்செல்லலாமோ என்ற பொருள், அப்பொருளையே,

...............விர்கதிர் தெறுதலின்
அலவுற்று குடிகூவ ஆறின்றிப் பொருள் வெகிக்
கொலையஞ்சாவினைவரால் கோல்கோடி அவனிழல்
உலகுபோல் உலறிய உயர்மர வெஞ்சுரம்

என்று இசைக்கின்றான். மேலும் பகை வேந்தன் சினந்து படையெடுத்து, நெருப்பிட்டுப் பகைத்த நிலம்போல, அது மழையின்றி இனிய தென்றலின்றி கதிரவனால் காய்ந்துள்ளது என்றும் கூறுகிறான்.

செருகு சினவேந்தன் சிவந்து
..................புலம்போல
........................
புயல் துளிமாறிய போர்க்கரு வெஞ்சுரம்.

அன்பால் ஒன்றுபட்ட அருமைத் தலைவன் பிரிந்து செல்கிறான், உள்ளத்தால் உருவகத்தால் இணைந்த தலைவிக்கு "பிரிவு" துன்பம் கொடுக்காமலிருக்குமா? துணைவன் சென்றவுடன் தன்னைத் துன்பம் அணுகி வந்ததென்பதைக் கூறவந்த தலைவி, அரசியல் கருத்தை உவமை கூறுகிறான்.

"பேதைமையான அமைச்சனின் திறனற்ற செயலால், ஆண்மையும் வன்மையும் குன்றிய மன்னன், நாட்டிலே வேற்றுப்படைகள் குவிந்து அழித்து, கெடுப்பதுபோல் என்னை இளவேனில் வந்து துன்புறுத்தியது."

அப்பொருளையே ஆசிரியர்;

பேதையோன் வினைவாங்கப் பிடிலா அரசன் நாட்டு
ஏதிலான் படைபோல இறுத்தந்தது இளவேனில்

என்று நவில்கிறார்.

இதுகாறும் கூறியவற்றிலிருந்து ஆள்வோர் நாட்டை அலைக்காமல் காக்கவேண்டிய அவசியமும், நடுநிலையில்லா அமைச்சனின் வாயுரையைக் கேட்கும் அரசனின் ஆட்சி நிலையும், நல்லவரைப் பேணாத மன்னனின் நிலையிலாத் தன்மையும், கொடுங்கோல் மன்னன் நாட்டில் மக்கள் நிலையும், பேதைமை அமைச்சனின் திறனற்ற செயலும் ஓரளவு நன்கு விளங்கும். இதனைப் படித்து பாரறியச் செய்வது தமிழர்களின் தலையாய கடனாகும்.

★

10-ம் பக்கத் தொடர்ச்சி

அதே நேரத்தில் மெயில் வெளிக் கைகாட்டி மரத்தைத் (அவுடரை) தாண்டி வந்துவிட்டது. குபேரநாதரின் காருக்கும், மெயிலுக்கும் நூறுகெஜ தூரம் கூட இருக்காது... ஊ... என்ற ஒலியைக் கேட்ட குபேரநாதர் காரைவிட்டு வெளியே குதிப்பதற்காகக் காரின் கதவைத் திறக்க முயன்றார். ஆனால் ... ஐயோ... இது என்ன? காரின் கதவு திறக்க மறுக்கிறதே...காலாலும், கையாலும் கதவை உதைத்துப் பார்த்தார்...கதவு திறக்கவில்லை. அவரென்ன சாதாரண உருவமா?...... கனபாடியாயிற்றே! காரின்சன்னல் வழியாகவும் தாவ முடியாதே.

"ஐயோ குப்பா!..."

"ஐயையோ......குப்பா" என்றலறினார்.

அப்பொழுதுதான் குப்பனின் தூக்கம் கலைந்தது. மெயில் வரும் சப்தம் கேட்ட அவன் ஓடோடி வந்து வெளியே பார்த்தான். குபேரநாதர், "ஐயையோ...குப்பா" என்னைக் காபபாற்று" என்று கத்திக்கொண்டிருந்தார்.

குப்பன் ஒரே தாவில் காரை உதைத்துத் தள்ளினான். அந்த நேரத்தில்தானா காரின் கதவு திறந்துகொள்ளவேண்டும். குப்பன் உதைத்த வேகத்தில் குபேரநாதர் கதவைத் திறந்துகொண்டு இரயில்வே லைனில் விழுவதற்கும், மின்னல்வேகத்தில்வந்த மெயில் வண்டி அவரது கால்களின்மேல் ஏறுவதற்கும் சரியாக இருந்தது.

"ஐயோ......குப்பா...ஐயோ...... அம்மா" என்று குபேரநாதர் அலறினார். அவரது இரண்டு கால்களும் தொலைவிலே கிடந்து இரத்தத்தில் துடித்தன.

அந்தக்கோரக்காட்சியை காணச் சகியாத குப்பன், தன் கண்களை மூடிக்கொண்டான்.

## —[5]—

"குப்பா...குப்பா...உன் வேலை போய்விட்டதைப்பற்றி கவலைப் படாதே...நீ உன் கடமையில் தவறாதவன். உன்னைக் கடமையில் தவறவைத்தவன் நான்தான்...... முதல் நாள் என் வேலைகாரன் உன்னை அடிக்காதிருந்திருந்தால், நீ அப்படி அயர்ந்து தூங்கியிருக்க மாட்டாய்...அப்பொழுது நிச்சயம் கேட்டைச் சாத்தி என்னை இக்கதிக்கு ஆளாகாமல் தடுத்திருப்பாய். என் கால்களை நான் இழப்பதற்கு நானேதான் காரணம்... பாவி...உன் மகன் கந்தன் கூப்பிடுவதைக் கூட நான் கேட்கவில்லை... குப்பா...நீ எத்தனையோ நூற்றுக்கணக்கானஉயிர்களைக்காப்பாற்றியதோடு என் உயிரையும் காப்பாற்றிவிட்டாய்......அதற்காக என் சொத்து முழுவதையும் உன் மகன் கந்தன் பெயருக்கு எழுதிவைத்திருக்கிறேன்" என்று கூறி ஆனந்தக் கண்ணீர் வடித்தார்.

## —[6]—

பத்து ஆண்டுகளுக்குப் பின்னால் குப்பன் கொடி காட்டிக்கொண்டிருந்த இடத்தில் ஒருவருமே கொடி காட்டவில்லை. கொடை வள்ளல் குப்பனின் நன்கொடையால் அங்கே ஓர் பெரிய இரயில் பாலம் எழும்பியது. இப்பொழுது குப்பனும், கந்தனும் அந்த இரயில் பாலத்தின் கீழே, தங்களது சொந்தக் காரிலே உல்லாசமாகச் செல்வதுண்டு.

குபேரநாதர் வீட்டிலேயே கந்தன் குடும்பமும் வசித்துவந்தது. ஓர்நாள் கந்தன் பச்சைக்கொடி விசில் சகிதமாகத் தன் தந்தை முன்னால்போய் நின்றான். அவனைக் கண்ட குப்பன் பிரமித்துப் போய் விட்டான். "அட...என்னடா... இது? ஏதாவது நாடகம் நடிக்கப் போறீயா?......இரயில்வே கார்டு மாதிரி வேஷம்போட்டுக்கொண்டு வந்து இருக்கியே..." குப்பன் ஆச்சரியத்துடன் கேட்டான்.

"இது வேஷமில்லையப்பா........ உண்மையிலேயே எனக்கு இரயில்வே கார்டு உத்தியோகம் கிடைத்திருக்கிறது. என்னால் பச்சைக் கொடியை, வீசாமல், விசிலை ஊதாமல் வீட்டிலே உட்கார்ந்து நிம்மதியாக வாழ முடியாது... எனக்கு ஆசீர்வாதம் செய்யுங்களப்பா" என்று கொஞ்சுகின்ற குரலிலே கேட்டான்.

"என்ன கேட்டுக்கார மாமா...இரயில் கார்ட் விசிலடிப்பது காதிலே விழலையா...கேட்டை இழுத்துப் பூட்டிவிட்டு நீயும் பச்சைக் கொடியை வீசி விசிலடி மாமா...... கார்டுக்கு உத்தரவுகொடு......" என்று கந்தன் மனைவி, மருதி உள்ளேயிருந்து கூறினாள்.

அதைக் கேட்டுக் கால்களை இழந்த குபேரநாதர் சிரித்தார்.

★

# நஞ்சு பூசிய நா

—(கனகு)—

பொன்னன் நல்லவனோ, கெட்டவனோ—அதை, அவனுடைய பேச்சும், செயலும், போக்கும் காட்டுதற்கு எந்தவிதமான வாய்ப்பும் இல்லை. அப்படிச் சொல்வதைவிட அவனுக்கென்று தனியாக ஒரு போக்கில்லை; செயல் இல்லை; பேச்சும் இல்லை என்னல் பொருந்தும்.

பேச்சில்லை என்றால்? அவன் ஊமை என்று பொருள் அல்ல. பேசுகிறான். நன்றாகப் பேசுகிறான். அந்தப் பேச்சு மூலமாக அவன் எண்ணத்தைக் காணமுடியாது. அவன் அறிவைப்பற்றி அறியமுடியாது. அவன் மடைமை நிறைந்தவன் என்றும் அறுதியிட்டுவிடலாகாது.

வாழ்வில் ஒருவன் உயர்வுகாண வேண்டுமானால், அவனிடம் அவசியம் இருக்கவேண்டுவது, ஆற்றல்—வல்லமை.

பொன்னன் அந்த வல்லமை என்னவென்பதை அறிவான். அவ்வாறே அவனிடம் அது இல்லை என்பதும் தெரியும்—அவனுக்கு.

அவனுக்கு இப்போது முப்பது வயதாகிவிட்டது. அவனைவிட ஐந்தாண்டுகள் இளையவன் அவன் தம்பி. தம்பி தன் இருபத்து மூன்றாவது வயதிலேயே வாழ்க்கையை முடித்துக்கொண்டுபோய்விட்டான். அவனுக்கு இப்போது இரண்டு வயதில் ஒரு குழந்தைகூட இருக்கிறது. பொன்னனோ இவ்வளவு நாளும் திருமணத்தைப்பற்றி எண்ணியவனாகவே வெளிக்காட்டிக் கொள்ளவில்லை.

இப்போதுகூட அவன் திருமணம் செய்துகொள்ள வேண்டுவது அவன் குடும்பத்தார்க்குத்தான் தேவையாக இருந்தது. அதாவது வீட்டில் உணவு செய்யவேண்டிய அலுவல் ஒன்று இருக்கின்றதே, அந்த வேலையைப் பெண்பால் தானே புரியவேண்டும்? நீண்ட காலம் அந்த அரும்பணி பொன்னனின் தாயாரால் ஆற்றப்பட்டு வந்தது. பின்னர் அதை அவன் தங்கையும், தம்பியின் மனையாளும் புரிந்தனர். தம்பி மறைந்ததும், அவன் மனைவியும் போய்விட்டாள் தாய் வீட்டுக்கு,—தம்பியின் பங்கைப் பிரித்து வாங்கிக்கொண்டு தங்கைக்கு மணாளன் கிடைத்துவிட்டதும், அவன் பினனோடு அவள் போய்விட்டாள். இப்போது வீட்டில் உணவு செய்யும் வேலை காலியாகிவிட்டது. ஆள் தேவை.

பொன்னனின் தந்தை வல்லமை என்றால் என்னவென்று கேட்பவர் அல்லர். அதைச் செயல்படுத்த முடியாதவரும் அல்லர். தெரியாதவரும் இல்லை. இல்லாவிட்டால், பொன்னனின் அன்னை உயிரோடிருக்கும்போதே, வேறொரு பெண்ணை வரித்திருக்க முடியுமா? அவனுக்கென்று ஒரு குடித்தனத்தைத் தனியாக நடத்தியிருக்க முடியுமா? இந்தக் குடும்பத்துக்கும் அந்தக் குடும்பத்துக்கும் எவ்விதமான ஒட்டுறவும் இல்லாமல்—நேராமல், தன்னை மட்டும் இரண்டு குடும்பத்திலும் ஒட்டவைத்துக் கொண்டு வாழ்ந்திருக்க முடியுமா?

அப்படியானால் ஒன்று செய்யலாமே. இந்தக் குடும்பம் என்று சொல்லிக்கொண்டு பொன்னன் ஒருவனதானே தனித்து நிற்கிறான்? இவனை அந்தக் குடும்பத்தோடு இணைத்துவிட்டால்?

பொன்னனின் தந்தை அதைக் கூடச் சோதனை செய்து பார்த்துவிட்டார்—முன்னர், அவன் தாய் இறந்துபோன சமயத்தில், அவன் தங்கை சின்னஞ் சிறுமியாக இருந்த காலத்தில்.

அது எதிர்பார்த்த பலனை அளிக்கவில்லை.

எனவே, பொன்னனுக்கு மணஞ் செய்து வைக்க இப்போது விழைந்தார். தீவிரமாகச் செயலில் ஈடுபட்டார்.

பொன்னன் அதை ஒப்புக்கொண்டானோ, இல்லையோ! அதை அவன் மறுத்து முரண்பிடித்துக் கொண்டு நிற்கவில்லை.

பொன்னனின் தங்கை 'மருவீடு' வந்தபோது, அவளை வாயிலில் நின்று வரவேற்கும் உரிமையைப் பெற்றாள் மருதி. ஆமாம், பொன்னன் வீட்டில் விளக்கேற்றிவைக்க வந்தவள் மருதி.

மருதி, பொன்னன் வீட்டின் மங்கல ஒளியாகத் திகழ்வாளா இன்றுபோல் என்றும்? ஊரார்க்கே ஐயம். நாம் எப்படி ஐயப்படாமல் இருக்கமுடியும்?

நாட்கள் நகர்ந்தன. மருதி—பொன்னன் வாழ்வும் அமைதியாக நடந்தது. குறிப்பிடத்தக்க மாற்றம் ஒன்றும் இல்லாமல் நடந்து கொண்டே இருந்தது. இதில் வியப்பதற்கொன்றும் இல்லை. ஆனால், அக்கம் பக்கத்தார் உள்ளத்தில் இது வியப்பைக் கிளறிவிட்டது. சில நாட்கள் அவர்கள் அசந்துபோய்க் கிடந்தார்கள். தங்கள் கண்ணுக்கு முன் இப்படியொரு விந்தை நிகழ்ச்சிநிகழ்வதை அவர்களால் எப்படித்தான் பொறுத்திருந்து பார்த்துக் கொண்டே போகமுடியும்? இவ்வளவு நாள் அங்கே அமைதி நிலவுமாறு விட்டுவைத்ததே அவர்களின் மாபெரும் சாதனை. அப்படிப்பட்டதொரு அருமையான சாதனையை அவர்களால் என்றென்றும் நடத்திக்கொண்டே போக முடியுமா?

நாட்கள் சில சென்றன; போட்டதும் முளைக்கக்கூடிய பொறுக்கு விதைகளை அக்கம் பக்கத்தார்

பிரித்துச் சேர்ப்பதற்கு மருதியின் உள்ளத்திலும், பொன்னனின் உள்ளத்திலும் அவர்கள் எதிர்பார்க்கும் அந்தப் பயிர் வளர்ந்து, விளைந்து, பலனும் அறுவடை செய்யப்படுவதைக்காண அவர்கள் துடித்துக்கொண்டிருந்தார்கள் ஒவ்வொரு கணமும்.

ஒரு நாட்காலை. மருதி கஞ்சி கொண்டுபோய்க்கொண்டிருந்தாள். வழியில் ஒரு கழனி. அங்கே களையெடுப்பு வேலை நடந்துகொண்டிருந்தது. ஊர்ப் பெண்டிர் பத்துப் பதினைந்து பேர் அங்கே காணப்பட்டனர்.

"ஏ, மருதி, கஞ்சி ஆம்படையானுக்கா?''

''ஆமாம்''—மருதி விரைந்து நடந்தாள்.

''அட, நில்லு மருதி. என்னமோ கொள்ளை போறப்போலே ஓடறியே! கொஞ்சம் நின்னு தான் பேசேன்''

"பாவம், யார் விட்டுப் பொண்ணோ! — இது அழகுக்கும், குணத்துக்கும் — பொன்னன் பயலுக்குக் கிடைக்கக் கூடியதா?— உம், உலகமே இப்படித்தானே! நல்லதுக்கு ஒரு பொல்லாதது. பொல்லாததுக்கு ஒரு நல்லது'' என்று சூள்கொட்டிக்கொண்டாள் ஒருத்தி.

"ஆமா, அந்தப் பயலுக்குப் பேசக்கூடத் தெரியாதே, உன் கூட அவன் எப்படிப் பழகுகிறான்?'' என்று சிரிப்பொலி கிளப்பினாள் ஒருத்தி.

"உனக்கு அப்பா, அம்மா இருக்கிறாங்களா? — பின்னே எப்படி உன்னை இங்கே குடுத்தாங்க?— பாவம், ரொம்ப ஏழைங்கபோலிருக்கு!' இப்படி ஒருத்தி கேள்வி போட்டு, அதற்குத் தானே விடையும் கூறி மருதியின் உள்ளத்தில் நேர்முகமாக நின்றே ஈட்டியைப் பாய்ச்சினாள்.

"எனக்கே சிரிப்பாய்ப் போச்சுடியம்மா, இந்தப் பொன்னன் பயலுக்கு பொண்ணு பார்க்கப்போறாங்கன்னு மொத மொதல்லே பேசிக்கிட்டபோது. இவனுக்காவது, யாராவது பொண்ணு குடுக்கிறதாவது, அப்புடீன்னு தான் நெனைச்சேன். இந்தப்பசங்க என்னடான்னா ஒரு பச்சைக் கிளியையே தட்டிக்கிட்டு வந்துட்டானுகளே!''

"என்னமோ பாவம், இது தலையிலே இப்படி எழுதியிருக்குது''

மருதி அசந்து நின்றாள். அவர்கள் எல்லாரும் ஏன் அப்படிப் பேசுகின்றார்கள் என்றே அவளால் யூகிக்க முடியவில்லை. அந்த நிலையில், அவளுக்கு அந்தப் பெண்கள் மீது ஆத்திரம் பீறிட்டுக்கொண்டு வந்தது. விருவிருவென்று நடந்தாள். குழப்பி நின்ற எண்ணத்தோடு எங்குபோகிறோம், என்ன செய்கிறோம் என்ற நினைவே இல்லாமல் நடந்தாள்.

''மருதி, மருதி'' என்று அடுத்த வீட்டுக்காரியின் குரல் அவள் பின்னாலிருந்துவந்தது. அப்போதுதான் அவள் நிமிர்ந்து நோக்கினாள். கஞ்சிக் கலயத்தோடு கழனி நோக்கிச் சென்றவள், திரும்பவும் விட்டுக்கே கஞ்சியோடு வந்துவிட்டாள்.

''ஐயோ, பசியோடு பொன்னனும், அவன் தந்தையும் — வாடுவார்களே என்ற எண்ணம் அவள் உள்ளத்தில் எழத்தான் எழுந்தது. எனினும் திரும்பவும் கஞ்சியை எடுத்துக்கொண்டு, கழனி நோக்கி, அந்த வம்புக்காரப் பெண்கள் நிற்கும் வழியாகச் செல்வதற்கு அவள் மனம் ஒருப்படவில்லை.

அவள் மனம் சிறிது குழம்பியது; கொந்தளித்தெழுந்தது. எரிந்தது; கொளுந்துவிட்டு எரிந்தது. உட்கார்ந்தவள் அப்படியே உட்கார்ந்துகொண்டே இருந்துவிட்டாள்.

"ஏன் இன்னும் கஞ்சி வரவில்லே?'' பொன்னன் தனக்குள் கேட்டுக்கொண்டான். அவள் வரும் வழியைப் பார்த்தான். பார்த்தான். கண் பூத்துப்போயிற்று. அவள் வரவில்லை. தந்தையும், மகனும் பட்டினி.

நடுப்பகல் வருமுன்னரே வீடு திரும்பினான் பொன்னன்—தான் உண்ணாவிட்டாலும், தந்தைக்காவது உணவு கொண்டுபோகலாம் என்ற எண்ணத்தோடு. வழி—அதே வழிதான். கழனியிலுள்ள களைகளை எல்லாம் அகற்றி, அவற்றைப் பன்மடங்காக்கித் தங்கள் உள்ளத்தில் வளர்த்துக்கொண்டிருக்கும் அந்த வம்புக்காரப் பெண்கள் வேலைசெய்யும் வழி.

அவன் தலையைக்கண்டார்களோ, இல்லையோ, தொடங்கிவிட்டார்கள் அவர்கள்.

"என்ன பொன்னண்ணே, இந்த நேரத்திலேயே வீட்டுக்குத் திரும்பிட்டீங்க?''

''அடி நீ ஒண்ணு. புதுப்பொண்டாட்டிக்காரன். அவனுக்கு மட்டும் ஆசை இருக்காதா, அடிக்கொருவாட்டி பொண்டாட்டியைப் பார்க்கணுமின்னு!''

''பாவம், அவன் முகத்தைப் பாரு. சோர்ந்துபோய் வரான், காலையிலேருந்து கஞ்சிகூடக் குடிக்காத மாதிரி''

"கஞ்சிக்கு என்னடி! முன்னே தான் ஆள் இல்லே. இப்போ பொண்டாட்டி வந்திருக்கா. வேளா வேளைக்கு நறுக்கா சோறு இல்லே சாப்புடுவான்''

"ஓகோ, அதுதான் வீட்டுக்குப் போறானோ?''

''பொண்டாட்டியைப் பாரு, பொண்டாட்டியை! அவ மினுக்குறதும், தளுக்குறதும், குலுக்கிறதும், குளிக்கிறதும்—அவளுக்கு அதுக்கே நாழி இல்லையே! பொன்னனை எங்கே கவனிப்பா? சாப்பாடு எங்கே பண்ணுவா?''

''அப்படின்னா, அவ பொன்னனைக் கவனிக்கிறதே இல்லேன்னு சொல்லு.''

''மெல்லச் சொல்றியே! பாவம், அப்பாவி இவன். நாலு பேரைப் போல உருட்டலும், மிரட்டலும், வெள்ளையும், சொள்ளையுமா, டம்பமும், டாம்பீகமுமா இருந்தா, இவனை அவ மதிப்பா. இவன் தான் இடுப்பு வேட்டியை மொழங்காலுக்குக் கீழே எறக்கிக் கட்டினது கிடையாதே! அதோட ஆளும் பாக்கறதுக்கு இலட்சணமாவா இருக்கறான்! மெலிந்து போயி என்னமோன்னு தானே இருக்கிறான்! இதெல்லாம் அவளுக்குப் பாக்கப் புடிக்கறதில்லே போலேயிருக்கு. முகத்தைச் சுளிச்சுக்குவாளாம். உர்ன்னு அப்படியேஉக்காந்துடுவாளாம். என்னு கூத்தைக் கேக்கறே!''

''ஐயோ பாவம். பொன்னன் வீணு பணத்தைச் செலவுபண்ணி, ஆவலாய்க் கலியாணத்தைப் பண்ணியும் பிரயோசனமில்லாமே போச்சே! பாரு காலையிலேருந்து கஞ்சிகூட இல்லைப் போலிருக்கு''

ஒவ்வொருத்தியின் சொல்லும் பொன்னனின் மென்மையான பகுதியை அலைக்கழித்தது. வலுக்

குறைந்த பகுதியைத் தேர்ட்டுக் காட்டியது. அவர்கள் வம்புப் பேச்சிலிருந்து கிளம்பிய சொற்கள் எல்லாம், செய்திகள் எல்லாம் உண்மையா என்று ஆய்ந்து பார்க்கும் நிலையை அவன் ஆத்திரம் மாற்றிவிட்டது. எண்ணிப் பார்க்கும் தன்மையை அவன் பதட்டம் பறித்துக்கொண்டது. பொறுமையை என்றுமே இழந்தறியாத அந்த அப்பாவி,—வம்புப் பேச்சுக்காரர்களின் பழிச்சொல்லால் அன்று அதை இழந்துவிட்டான்.

ஆத்திரத்தோடு வீடு சென்றான்.

அங்கே அவன் கண்ட காட்சி—

ஆம், மருதி உட்கார்ந்திருந்தாள் -தன் அலட்சியப் பார்வையை ஒரு முறை பொன்னன்மீது வீசிவிட்டு அசையாமல் உட்கார்ந்திருந்தாள்.

பொன்னன் வயிறுபற்றி எரிந்தது; மிகுந்துவிட்ட பசியோடு தூண்டிவிடப்பட்ட ஆத்திரமும் ஒன்று கலக்க.

"ஏய்!"

அந்தப் பூனையிடமிருந்து புலிக்குரல் எழுந்தது.

மருதி மறுமொழி பேசவில்லை. அவனைத் திரும்பியும் பார்க்கவில்லை. அவன் என்ன செய்கிறான், செய்யப்போகிறான் என்பனபற்றி அவளுக்கு அக்கறையே இல்லை.

"மடார்!"

"ஐயோ!"

தீர்ந்துவிட்டது ஆத்திரம். தீர்த்துவிட்டது ஆத்திரம். ஒழிந்துவிட்டது அலட்சியம். ஓய்ந்துவிட்டது வெறுப்பு.

மருதியின் தலை அப்படியொன்றும் கல்லாலோ, இரும்பாலோ செய்யப்பட்டது இல்லையே, பொன்னன் தன் பலங்கொண்ட மட்டும் உயரத் தூக்கித் தாக்கிய கடப்பாரை அதை நசுக்காமலோ, சிதைக்காமலோ ஆடாமல், அசையாமல் அப்படியே அவள் இருந்தவாறு விட்டு வைக்க.

கணப் பொழுதில் பழிகாரன், கொலைகாரன் ஆனான் பொன்னன்.

அது தந்த சன்மானத்தைப் பெற்றுக்கொண்டவனும் அவன்தான். வீதிவழி சென்று வேடிக்கை பார்ப்போர் அதனைப் பெற விழையவில்லை. வம்புப் பேச்சுக்காரர்களும் அதைத் தம்ம தூக்கிக் கொள்ளவில்லை.

# ஏழையென்றால்...!

—[ப. கோ. இராமன்]—

அன்று மப்பு மந்தாரமாக இருந்தது. வானத்தில் கருமுகில் கூட்டம் நிறைந்திருந்தது. நான் ஊர் நடுச்சாலை வழியே நடந்துகொண்டிருந்தேன். என்னை, சைக்கிள்களும் மோட்டார்களும் கடந்து சென்றுகொண்டிருந்தன. திடீரெனப் பலத்த காற்று வீசத் தொடங்கியது. தொடர்ந்து பெருமழை பெய்யத் தொடங்கியது. அந்த வழியிலே கண்ணுக்கெட்டிய மட்டும் தங்குவதற்கு ஒரு சிறு இடமும் தென்படவில்லை.

எனது உடைகள் என்று சொல்லத் தகுந்த—ஓரிரு கந்தல் துணிகளும் நனைந்துவிட்டன. உடலெல்லாம் குளிர்ந்தது. எனக்கு உடுத்தவோ மாற்றுடை இல்லை. மேல் சட்டையைக் கழற்றினேன். சட்டையா அது? துணியால் நனைந்த என் உடலைத் துடைத்துக் கொண்டேன். கார் காலமாதலால் கதிரவன் தன் கடமை முடிந்ததெனக் கருதி மேற்றிசையில் மறைந்தான். இருள் உலகைக் கவ்விக்கொண்டது. அந்தக் கொடிய இருளில் வழி புரியவில்லை. கொஞ்சத் தூரத்தில் வெளிச்சம் தென்பட்டது. வீடாக இருக்குமென விரைந்து சென்றேன். அந்த இடத்திலிருந்து பெரிய மணியின் ஒலி கேட்கவே, அது வீடல்ல, கோயில் என்பது தெரிய வந்தது. கோயிலடைந்தேன். குருக்கள் பூசையை முடித்துப் பூரிப்புடன் உணவுத் தட்டுடன் வெளிவந்தார்.

"ஐயா!" என்றேன்.

"யார்?" என்றார்.

"வழிப்போக்கன்" என்றேன் மெல்லிய குரலில்.

"என்ன வேண்டும்" என்று வெறுப்புடன் வினவினர்.

"பசிக்கிறது, கொஞ்சம்..." என்றேன்.

"இது கோயில்" என்றார் பரிகாசமாக!

நான் பேசவில்லை. பேசினால் என்ன ஆகுமென எனக்குத் தெரியும். ஆனால் சிரித்தேன். எப்படி இந்த உலகைப் பார்த்து சிரிக்காமல் இருக்க இயலும்? பக்தர்கள் பகவானுக்குப் படைக்கிறார்கள். ஆனால் பசியால் வாடும் ஏழையை எட்டி உதைக்கிறார்கள்; ஏளனமாய்ப் பேசுகிறார்கள். ஆம் ஏழையென்றாலே அப்படித்தான்! எனக்குப் பழைய சம்பவம் நினைவுக்கு வந்தது.

மூன்று ஆண்டுகளுக்கு முன்!

நான் தரையில் துண்டை விரித்துப்போட்டுப் படுத்திருந்தேன். எனக்கென்று வீடில்லை. பரந்த வெளிதான் என்வீடு — உலகம் எல்லாம். சாலையின் மரத்தடிதான் இருப்பிடம். நான் மட்டுமல்ல; எத்தனையோ குடும்பங்கள் மரத்தடியில். நான் வானத்தை நோக்கிக்கொண்டு, மேகங்கள் ஊடே மறைந்து மறைந்து விளையாடும் வெண்ணிலவையும், விண்ணிலே மின்னும் தாரகைகளையும் கண்டு களிப்பெய்தினேன். இயற்கைதானே ஏழைக்கு இன்பமளிப்பவை!

"அண்ணா, அண்ணா!" என்ற குரல் கேட்டுத் திரும்பினேன. "அவசரமாக வா, அவருக்கு மிகவும்......என்று தொண்டையடைக்க கூறினாள் தங்கை தங்கம். எழுந்து ஓடினேன்.

தங்கத்தின் கணவர் கடும் காய்ச்சலால் புலம்பிக்கொண்டிருந்தார். மருந்து வாங்கிக் கொடுக்கக் காசுகூட இல்லை. கையிலிருந்த காசுகள் கஞ்சிக்குக்கூடப் போதவில்லை. தங்கை தங்கம் மங்கலமாக வாழவேண்டுமே என்ற எண்ணம் என்னை வாட்டியது. என்றோ ஒருநாள் கந்தல் துணியின் தலைப்

பிலே முடிந்து வைத்திருந்த முக்கால் ரூபாய் என் கவனத்திற்கு வந்தது. "வருகிறேன்" எனக்கூறி மருந்துக்கடை சென்றேன். இல்லை ஓடினேன்!

நாங்கள் சிறுவர்களாய் இருக்கும் போதே எங்கள் தாய் தந்தையர் இறந்துவிட்டனர். தாய் இறக்கும்போது பத்து வயதுச் சிறுமியாக இருந்த தங்கை தங்கத்தை என் கையில் பிடித்துக்கொடுத்து, "மாணிக்கம், தங்கத்தைக் கண் கலங்க விடாதே! அவளைப் போற்றிக் காத்து புகலிடம் தேடிவை. மங்கலகரமாக வாழவை" எனக் கூறி உயிர் துறந்தார். அன்றிலிருந்துதான் என் பொறுப்பு மேலிட்டது. தங்கையின் சுகம் தான் என் சுகம் எனக் கொண்டேன். எத்தனை நாள் நான் பட்டினியாக இருந்து தங்கையை வளர்த்தேன் தெரியுமா? அவள் வளர்ந்தாள்; பருவமடைந்தாள்; ஏழைக்குத் தகுந்த ஏழையான ஒருவருக்கு மணம் முடித்து வைத்தேன். ஏதோ வாழ்ந்து வருகிறார்கள் என்ற நிம்மதியோடிருந்தேன். ஆனால் இன்று............

நான் காசு கொடுத்து மருந்து வாங்கிக்கொண்டு விரைந்து வந்துகொண்டிருந்தேன். "களுக்" என்ற சப்தத்துடன் கையிலிருந்த மருந்துப் புட்டி கீழே விழுந்து நொறுங்கியது. வழிந்தோடிய மருந்திலே என் தங்கையின் சோகம் நிறைந்த முகமும், அத்தானின் அவதியுடன் கூடிய அசைவும் தென்பட்டது. என் செய்வது?

திரும்பினேன். பெரிய மனிதர் ஒருவர் என்னைச் சினந்து நோக்கியவாறு 'பரதேசி பசங்க! பார்த்துப் போகாமல் என்னடா...? என்று, தான் உயர்ந்தவன் என்பதை பறைசாற்றிக்கொண்டே ஏதேதோ பேசினார். எங்கேயோ பார்த்தவாறு வந்து என்மேல் மோதிய அவர் ஏழையென்ற எண்ணத்தால்...! 'என்ன!' என்று ஆச்சரியமும் அவலமும் நிறைந்த குரலொடு சோகத்தோடு பார்த்தேன். என் பார்வை அவருக்கு எப்படித் தோன்றியதோ?

உயிருக்காக மன்றாடிக்கொண்டிருக்கும் என் தங்கையின் கணவருக்காகக் கொண்டுசென்ற—எந்த மருந்தால்—என் தங்கையின் வாழ்வுக்கு வளமளிக்க முடியுமென்று நம்பிக்கையுடன்சென்றேனோ நான், அந்த மருந்துப் புட்டியை உடைத்தவர் என்னை 'பரதேசி' என்றார்; பலவாறு ஏசினார்; பயமுறுத்தினார். எனக்கிருந்த ஆத்திரத்தில் நானும் ஏதோ பேசினேன்.

இரவு நேரமாக இருந்தாலும் 'வேடிக்கை பார்க்கும் கூட்டம்' கூடிவிட்டது. வந்தவர்களில் பலர் வல்லவருக்கு பரிந்து பேசினர். எனக்காகப் பரிதாபப்பட்டவர்கள் மிகச்சிலரே. அவர்களும் என்னையொத்த ஏழைகளாகத்தான் இருக்கமுடியும். போலீசார் வந்தனர். நான கைதியாகப் பிடிக்கப் பட்டேன். தெருவில் 'பெரியவர்' ஒருவரைத் தாக்கியதாகக் குற்றம் சாட்டப்பட்டேன், சிறையில் அடைக்கப்பட்டேன்.

கலங்கினேன் — கைதியானேன் என்பதாலல்ல! தங்கையின் நிலைக்காக. எனது அன்னையின் வேண்டுகோளும்-தங்கையின் அழுகுரலும் என் காதுகளில் ஒலித்துக் கொண்டே இருந்தது. நானும் அழுதேன். அழுவதைத் தவிர ஏழையால் ஆவதென்ன கண்டோம்!

காலம் கயவர்களின் சொக்கட்டான்களாகி உருண்டோடின.

நானும் விடுதலையாகி நான்கு நாட்கள் ஆகின்றன. நான் அலையாத இடமில்லை; அணுகாத ஆளில்லை. எங்கெல்லாமோ சென்றேன். அன்று தங்கையோடு நாங்களிருந்த இடத்தில் இன்று மாடமாளிகைகள் இருக்கின்றன. அங்கு தங்கை இல்லை — யாரோ ஒரு தனவான்...! நான் சென்ற இடமெல்லாம் என்னைச் சினந்து பார்த்தது, சிறைவாசம்செய்தவன என்பதாலோ என்னவோ?

இன்று இவ்வுலகில் எனக்கு உற்றார் உறவினர் யாருமில்லை. நான் மீண்டும் வாழ்க்கையைத் தொடங்குவதா? தொடங்கினால் வாழமுடியுமா? நீங்களே சொல்லுங்கள்! இல்லை என் கதை — சோகக் கதை தொடர்கதை ஆகவேண்டுமா?

★


## தி. மு. கழகச்
# சட்ட திட்டங்கள்

கழகச் சட்டதிட்டப் புத்தகம் தயாராகிவிட்டது.

**தனிப்பிரதி விலை 25 காசு**

(அஞ்சல் மூலம் பெற விரும்புவோர் தனிப்பிரதி விலையுடன் 5 காசு சேர்த்தனுப்பவும்)

விவரங்களுக்கு:—

தி. மு. க. தலைமை நிலையம்
"அறிவகம்"
சென்னை 13.